# அக்ஷயா
மாத நாவல்

ரூ.8/-



# காதல் பைங்கிளி!

## அகிலா கோவிந்த்

# காதல் பைங்கிளி...



## அகிலா கோவிந்த்



அன்று காலைப் பொழுதே வெகு உற்சாகமாய்த் தான் ஆரம்பித்தது மதுமதிக்கு. மை விழிகளை விரித்ததும் இன்பத்தேன் வெள்ளம் காதுகளில் புகுந்தது.

“ஹேப்பி பர்த்த டே டு யு...! பிறந்த நாள் இனிய வாழ்த்துக்கள்...!” என ஒரே வாழ்த்து மயம்தான்! இனிமையான கூக்குரல்கள். வாழ்த்து பூபாளங்கள். தோழிகள், உறவினர்கள், தெரிந்தவர்கள் என அத்தனை பேரிடமும் இருந்து போன் கால்கள், செல்பேசி அழைப்புகள்.

முதலில் கண் விழித்து இஷ்ட தெய்வங்களை எல்லாம் கும்பிட்டவள், சாஷ்டாங்கமாய் தாய் தந்தையரின் காலில் விழுந்து வணங்கினாள்.

“ஐயோ... என்ன இது... பார்மாலிட்டி?” என புதறித்தான் போனார் அவளின் செல்ல டாடியும் பெரிய மில் அதிபரும் ஆன கோடீஸ்வரர் ராஜமாணிக்கம்.

தாய் செண்பகமோ தமிழ்ப் பண்பாடு மாறாத அவளது குணத்தில் மெய்சிலிர்த்து ஆவலாய் அவளை தூக்கி உச்சி முகர்ந்தாள். "என் செல்லம்"! என்றபடி கன்னங்களில் முத்தமிட்டாள்.

பதிலுக்குக் குறும்புப் புன்னகையுடன் சிரித்த மதுமதி, "நான் எப்போதும் டாடி செல்லம்தான்" என்றபடி ராஜ மாணிக்கத்திடம் தாவி அவரது கன்னங்களில் முத்தமிட்டாள்.

"அப்படிப் போடுடா என் செல்லம்...!" என ராஜ மாணிக்கம் மனமகிழ்ந்தவராய் தன் வெளுத்த மீசையைத் தடவியவாறு செண்பத்தை கெக்கலிப்பு பார்வை பார்த்தார்.

"அதற்குள் அப்பாவும் பொண்ணும் ஜோடி சேர்ந்தாயிற்றா...? இனி நான் இருந்தால் அவ்வளவுதான்! இருவரும் என்னை கிண்டலடித்தே ஒரு வழி பண்ணி விடுவீர்களே..!"

போலியாய் விரைசல் காட்டி குடுகுடுவென தனது கனத்த சரீரத்துடன் டைனிங் ஹாலை விட்டு சிரிப்புடன் ஓடினாள் செண்பகம்.

ராஜமாணிக்கம் உற்சாகமாய் மதுமதியைப் பார்த்தார்.

இருபது வயது தங்கச்சிலையாய் முத்துப் பற்கள் பளீரிடச் சிரிக்கும் மதுமதியின் இயற்கையழகு அவரைப் பிரமித்து பெருமிதம் கொள்ளை வைத்தது.

வாஞ்சையாய் பாப் கட் செய்யப்பட்ட அவளது ஸ்ப்ரிங் முடி தலைக்கேசத்தை நீவியவர், 'இன்னிக்கு உன்னோட ப்ரோக்ராம் என்னம்மா? என்றார்.

'நீங்களே..... சொல்லுங்கள்... டாடி....' என்றாள் மதுமதி.

'ஒரு அருமையான இடம் இருக்கிறது. அங்கு போகலாமா? என்றார்.

'அருமையான இடமா... எது டாடி?'

'விட்டில் ஃப்ளவர் அன்பு இல்லம்....'

'அன்பு இல்லம்மா...?'

'அதான்.... சிறுவர் சிறுமியருக்கான அனாதை ஆசிரமம்...'



ஐயோ.. வேண்டவே வேண்டாம் டாடி....! என்றாள் மதுமதி கண்களை மூடி காதுகளை கரங்களால் பொத்தியபடி

ஏன்மா.... இவ்வளவு பயப்படுகிறாய்...?

பிறகு என்ன டாடி.... இது போன்ற அனாதை ஆசிரமங்களில் நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். என்ன நடக்கும் தெரியுமா?

என்ன நடக்கும்?

கைகளைக் கட்டியபடி ராஜமாணிக்கம் கேட்க மை விழிகள் விரிய விவரித்தாள் மதுமதி.

வேறு என்ன... ஆசிரமத்தில் ஒரு வயதான பெண்மணி இருப்பார். அவரைச் சுற்றி சிறு சிறு குழந்தைகள் கூட்டம் கால் கடுக்க நின்று கொண்டிருக்கும். எல்லாக் குழந்தைகளும் அடித்து ஒப்புவிக்கச் சொன்னது போல், ஹேப்பி பர்த் டே டு யூ... என பாடும்.. அப்படி அவர்கள் செய்வதைப் பார்த்தால் சந்தோஷம் வராது. இரக்கமும் பரிதாபமும்தான் வரும். மொத்தத்தில் ஆவலாய் போன எனக்கு மூட் அவுட்தான் ஆகிவிடும். அதனால் வேண்டாம் என்கிறேன் டாட்...

மதுமதி முடிக்கவும் பெரிதாய் சிரிக்க ஆரம்பித்தார் ராஜமாணிக்கம்.

மது... நீ நினைப்பது போல் இது... இல்லை... என்றார்.

நினைப்பது போல் இல்லையென்றால்...?

ராஜமாணிக்கத்தின் முகத்தில் சிரிப்பு மறைந்து சீரியஸ் ஆன உணர்வு வந்தது.

நானும் உன் போல்தான் எண்ணி இது போன்ற ஆசிரமங்களுக்குச் செல்லவே தயங்குவேன். ஆனால் என் தொழில் நண்பர் ஒருவர் தற்செயலாய் இந்த ஆசிரமத்திற்கு கூட்டிப் போனார். அங்கு போன நான் அப்படியே அசந்து விட்டேன். அது மற்ற ஆசிரமங்கள் போல் இல்லை. அன்பு இல்லம் என்ற பெயருக்கேற்றாற்போல் அங்கு அன்பு மட்டும்தான் இருந்தது. வெரி வெரி இன்ட்ரஸ்டிங்! இப்படி ஒன்றை ஒருவரால் உருவாக்க முடியுமா என்ற ஆச்சரியம்தான் எழுந்தது....

அப்படியா... அப்படி என்ன அந்த அன்பு இல்லத்தில் இருக்கிறது?

ராஜமாணிக்கம் மறுபடியும சிரித்தார்.

அதைச் சொன்னால் புரியாது. நீ நேரில் வந்து பார்த்து அனுபவித்தால்தான் புரியும்....

அப்படியானால் ஓகே! நான் வருகிறேன்..! சம்மதம் சொன்னாள் மதுமதி.

அன்று மதியமே ராஜமாணிக்கம் ஆர்டர் செய்து வாங்கிய உணவு வகைகள், ஸ்வீட் பாக்ஸ்கள் என ஒரு பெட்டி நிறைய எடுத்துக் கொண்டு காரில் இருவரும் கிளம்பி விட்டார்கள்.

செண்பகம் கண்களை உருட்டிக் கொண்டு, எனக்கு அதெல்லாம் அலர்ஜி. நீங்கள் போங்கள்.... என்று வழியனுப்பி வைத்தாள்.

இருபது நிமிட பயணத்தில் கார் அந்த விட்டில் ஃப்ளவர் அன்பு இல்லத்தினுள் நுழைந்தது.

கதவைத் திறந்து மெல் இறங்கியவள் நிஜமாகவே வியந்தாள்.

அது... ஒர ஆசிரமம் போலவே இல்லை. சுற்றிலும் பச்சைப் பசேல் புல் தரைகள். வித விதமான செடிகள்... கொத்துக் கொத்தாய் கண்களைக் கவரும் புக்கள்.. தென்னை மரங்களும் வேப்ப மரங்களும் சில்லென குளுமையாய் சூழ்ந்திருக்க... நடுவில் சிறுசிறு அறைகளுடன் ஆசிரமக் கட்டிடம். ஒரு இனிய சோலைக்குள் நுழைந்தது போல் தான் மதுமதிக்குத் தோன்றியது.

முகப்பிலேயே ஆசிர நிர்வாகியான கண்ணன் பளீர் சிரிப்புடன் வரவேற்று அழைத்துச் சென்றான். சட்டென ஒரு நான்கு வயது பிஞ்சு அவள் முன்னால் தோன்றி சிறு பூங்கொத்து ஒன்றை அவள் கைகளில் கொடுத்து அழகாய் சிரித்தது.

வாருங்கள்... உங்களை வரவேற்கிறேன்... என தன்மழலைக் குரலில் சொல்லியதும் தன்னையறியாமல் அந்தக் குழந்தையை வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் மதுமதி.

இன்னும்... வா... உனக்கு நிறைய ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.இ... என சிரிப்புடன் கைகளை அசைத்த படி முன்னால் நடந்தார் ராஜமாணிக்கம். மதுமதி பின்தொடர்ந்தவள் வியப்பு விலகாமல் தான் பார்த்தாள்.



வழிநெடுக சுவர்களில் தெரியதாய் அழகழகான பெயிண்டிங்குகள்... திருக்குறள் மற்றும் நல்லொழுக்க வாசகங்கள்... சுவரும் சரி... அறைகளும் சரி... பளிச்சென துடைத்து வைத்தாற்போல்... சுத்தத்துடன்.... சிறுவர் சிறுமியரைக் கவனிக்க மஞ்சள் சீருடை பணியாளர்கள்....

ஒரு நடுத்தரப் பெண்மணி புன்சிரிப்புடன் ராஜமாணிக்கத்தின் எதிரே தோன்றி நமஸ்கரித்தவாறு உள்ளே அலுவலகம் நோக்கி அழைத்துச் சென்றாள். ராஜமாணிக்கம் தான் வந்த விபரத்தை அவளிடம் விளக்கினார்.

ப்ரேயர் ஹால், நூலகம், படிப்பகம், விளையாட்டுப் பகுதி என சிறு சிறு பிரிவுகளுடன் கூடிய அறைகள் அதில் அமைதியாய் உட்கார்ந்திருக்கும் சிறுவர் சிறுமியர் கூட்டம். ஆச்சரியத்தின் உச்சிக்குப் போனாள்.

பூந்தோட்ட புல்தரையில் வண்ண வண்ணப் புக்களை வைத்து வரிசைப்படுத்தி அந்த எழுத்துக்கள், வாசகங்கள் ஹேப்பி பர்த் டே டு யு...! என சிறுவர் சிறுமியர் கூட்டம் ஒன்று பூக்களால் உருவாக்கி அவள் வரவுக்காகக் காத்திருந்தபடி.

மதுமதி நுழைந்ததும் எல்லோரும் கை தட்டினார்கள். ஆவலாய் ஓடி வந்து கை குலுக்கினார்கள். அக்காவிற்கு அன்புத் தம்பியின் இனிமையான வாழ்த்துக்கள்... அன்புத் தங்கையின் இனிமையான வாழ்த்துக்கள்... என மழலை குரலில் அன்பொழுகக் கூறி அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

ராஜமாணிக்கமும் கண்ணனும் ஒரு புன்னகையுடன் மதுமதியை அங்கே விட்டுவிட்டு அகன்றுவிட அடுத்த ஒரு மணி நேரத்தை அந்த வாண்டுகளுடன்தான் கழித்தாள் அவள்.

நேரம் போனதே அவளுக்குத் தெரியவில்லை. புல் தரையில் உட்கார்ந்த அவளைக் கொத்தாய் சூழ்ந்து கொண்டனர் பிஞ்சு வாண்டுகள். ஆள் ஆளுக்கு ஒரே பேச்சுதான்!

அக்கா... எனக்குப் பாடத் தெரியும் கேட்கிறீர்களா? என ஒரு வாண்டு பாடியது. மற்றொன்று, அக்கா நான் நன்கு டான்ஸ் ஆடுவேன் பாருங்க... என்றபடி மற்றவர்களின் சிரிப்பைப் பொருட்படுத்தாமல் ஆடிக்காட்டியது. இன்னொன்று, எனக்கு நன்றாக இங்கிலீஷ் பேச வரும் பாருங்க! என்றபடி தஸ் புஸ் என ஆங்கில வார்த்தைகளை குழைத்துப் பேசிச் சிரிப்பு மூட்டியது.

## சமையல் குறிப்பு :



-வசந்தி வேலன்



### சோயா - பாலக் மீலன

**தேவை** : நெய் இரண்டு டேபிள் ஸ்பூன, சிகப்பு மிளகாய் நான்கு. இஞ்சி (பொடியாக நறுக்கியது) ஒரு டேபிள் ஸ்பூன், நடுவில் கீறிய பச்சை மிளகாய் இரண்டு. கீரை இரண்டு கட்டு (கழுவி பொடியாக நறுக்கப்பட்டது) சர்க்கரை ஒரு டீஸ்பூன், க்ரீம் இரண்டு டேபிள் ஸ்பூன், உப்பு ருசிக்கேற்ப.

**அலங்கரிக்க** : பொடியாக நறுக்கிய கொத்தமல்லி, கரம் மசாலா பொடி ஒரு டீஸ்பூன். வேகவைத்த சோளம் ஒரு கப், வேகவைத்த சோயா ஒரு கப்.

**செய்முறை** : கனமான வாணலியில் நெய்யை விட்டு அதில் மிளகாயை போட்டு சிவக்க வதக்கிக் கொள்ளவும். பிறகு இஞ்சியை சேர்த்து மேலும் நன்றாக வதக்கவும். பச்சை மிளகாய், கீரை, சர்க்கரை மற்றும் உப்பு சேர்த்து வாணலியை மூடாமல் கீரை நன்றாக வெந்து தண்ணீர் வற்றும் வரை சமைக்கவும். மக்காச்சோளத்தையும் சோயாவையும் சேர்த்து நன்றாகக் கலக்கவும்.

க்ரீம் மற்றும் வாசனைக்கேற்ப கரம் மசாலா சேர்த்து மேலும் 2 நிமிடங்கள் அடுப்பில் வைக்கவும். கொத்தமல்லியால் அலங்கரித்து சூடாக சாதம், ரொட்டி அல்லது புல்காவுடன் பரிமாறலாம். செஃபின் மாற்று ஆலோசனை : இதே உணவை எலும்பில்லாத சிக்கன் மற்றும் உலர்ந்த திராட்சை அல்லது பனீர் மற்றும் மக்காச்சோளத்துடன் சாப்பிடலாம்.



இப்படி ஒவ்வொரு பிஞ்சும் உரிமையாய் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டும், தோளைப் பற்றிக் கொண்டும், கழுத்தைக் கட்டிக் கொண்டும் சொன்ன போது அவர்களின் அன்பையுணர்ந்த மதுமதி நிஜமாகவே நெகிழ்ந்து தான் போனாள்.

அன்பைப் பொழியும் இந்தப் பிஞ்சுகள் எல்லாம் தாய் தந்தையற்ற அனாதைகளா? என்ன ஒரு கொடுமை!

நெஞ்சைக் கிழிக்கும்படி அந்த வேதனையும் எட்டிப் பார்த்தது மதுமதிக்கு.

கூடவே அந்த பிஞ்சு முகங்களில் தெரியும் அந்த உண்மையான மகிழ்ச்சியும், பூத்துக் குலுங்கும் அந்த சந்தோஷமும் பெரும் நிம்மதியையும் தந்தது.

இந்த ஆதரவற்ற பிஞ்சுகளுக்கு ஆதரவு கொடுத்து இது போன்ற மகிழ்ச்சி பொங்கும் இனிமையான சூழ்நிலையை உருவாக்குவது மிகப் பெரிய விஷயம் அல்லவா?

அதை அப்படி உருவாக்கியவன் ஒரு இளைஞன் என்ற நினைக்கும்போது அவள் வியப்பு பன்மடங்காகியது.

அவன் பெயர் கூட.. என்ன சொன்னார்கள்? ஆங்...! கண்ணன்..!

மறுபடியும் அவனைப் பார்க்கும் ஆவல் அவளையறியாமல் கூடியது

திரும்பிப் பார்த்தபோது மாமர நிழல்களின் பக்கம் தந்தையுடன் அவன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

கைகளை அசைத்து அசைத்துப் புன்னகை மாறாமல் அவன் பேசும் பாங்கு இதுவரை எந்த ஆணிடமும் அவள் காணாதது.

அந்தச் சிரிப்பு.... அதை விட மின்னும் அவனது கண்கள்....

அவனை முதல் முறையாய் பார்த்தும் நேருக்கு நேர் ஏற்பட்ட வீச்சு....

கண்களாலும் ஒருவரால் சிரிக்க முடியும் என்பதை அப்போதுதான் அவள் உணர்ந்தாள்.

அது உண்மையா...? என்ற அறிய மீண்டும் அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் அமைந்தது.

அரை மணி நேரம் கழித்து அவள் முன் தோன்றிய அவன், வாருங்கள் இன்னொரு முக்கியமான இடம் இருக்கிறது... என இல்லத்திடின் உட்புறமாய் கூட்டிப் போனான்.

அவன் அப்படிக் கூப்பிடும்போது மை விழிகளைச் சாய்த்து அவன் கண்களை உற்றுப் பார்த்தாள்.

உண்மைதான்!

பேசும்போது சிரிப்பது அவன் உதடுகள் அல்ல. அவன் கண்கள். என்ன அதிசயம்!

அவன் கூட்டிப் போன அறையில் ஒரு சிறிய மேடை. அதில் கி போர்டு, கிதார், தபேலா என இசைக் கருவிகள், பின்னால் சுவரில் கலர் ரிப்பன்களில் இளை நிலா இசைக்குழு... என பளீரிட்ட எழுத்துக்கள்.

என்ன... ஆர்கெஸ்ட்ராவா...? இசை நிகழ்ச்சி நடத்துகிறீர்களா?

அவள் வியந்து கேட்க... தலையாட்டினான் அவன்.

இளம சிறுவர்.... சிறுமியரைக் கொண்டே நான் நடத்தும் சிறிய இசைக்குழு. இங்கு மட்டுமல்ல வெளியிடங்களிலும் விசேஷ நிகழ்ச்சிகளுக்குச் சென்று கச்சேரி நடத்துவதுண்டு. அதற்காக சிறு தொகை ஒன்றையும் நன்கொடையாக பெறுகிறோம்...

அப்படியா...? வெரி இன்ட்ரஸ்டிங்..! நன்றாகப் பாடுவீர்களா...?

ம்ம்... ஆனால்... சினிமாப் பாடல்கள் அல்ல. மெலோடியஸ் ஸாங்ஸ்... மனதை உருக்கும் பாடல்கள்... நல்ல கருத்துக்களைக் கொண்டுள்ள தத்துவப் பாடல்கள்.... போல்... என்றவன் பார்க்கிறீர்களா? என மைக்கை ஆன் செய்தான். ஒரு பத்து வயது சிறுவன் கிபோர்டில் அமர்ந்து இயக்கினான். இன்னொரு சிறிய வாண்டு உட்கார்ந்து தபேலாவை அழகாய் தட்டியது. வெண்குரலில் அவன் வாயசைத்துப் பாடினான்.

என்ன இது! அவன் மைக் பிடித்து கம்பீரமாய் பாடிய அழகில் அவள் மறுபடியும் தன்னை தொலைக்கத்தான் செய்தாள். வைத்த கண் வாங்காமல் இப்படியொரு பார்வை அவள் யாரையும் இதுவரை பார்த்ததில்லை. அப்படித்தான் மதியிழந்தவள் போல் அவனை உற்றுப் பார்த்தாள். அவன் பாடிய பாடலோ அதன் கருத்தோகூட அவள் மனதில் பதியவில்லை.

அவனது உருவம்தான் அழகான ஓவியம் ஒன்றை வரைவது போல் மெல்ல மெல்ல அவள் மனதில் முழுமையாய் படர்ந்து கொண்டிருந்தது.



ஹலோ.... மேடம்... என மீண்டும் அவனது கணீர் குரல் உலுக்கியபோதுதான் அவள் சுய நினைவுக்கு வந்தாள்.

எப்போது பாடி முடித்தான்... எப்போது மேடையை விட்டு இறங்கி அவர் பக்கம் வந்தான். எதையுமே உணரவில்லையே...!

ஏதோ மயக்கத்தில் இருப்பது போல்தான் அவள் இருந்தாள்.

இதுவரை இது போன்ற உணர்வை அவள் அனுபவித்ததில்லை. அவளுக்கு ஏற்பட்டும் இல்லையே?

எதனால் இது...?

முதல் முறையாய் மனதுள் அந்த சலனத்தை உணர்ந்தாள் மதுமதி.



## 2



மறுநாள் கல்லூரயில் செல்வதற்காக பஸ் ஸ்டாப்பில் நிற்கும் சமயம் அந்த அதிசயம் நடந்தது.

அன்று கண்ணனை மீண்டும் பார்த்தாள் அவள்!

வழக்கமாய் வீட்டில் நிற்கும் விலையுயர்ந்த கார்களில் எதாவது ஒன்றில்தான் மதுமதி கல்லூரி செல்வது வழக்கம். அப்படி தனியே செல்வது போராடிக்கும் என்பதால் வழியில் தென்படும் தோழிகளை எல்லாம் காரில் ஏற்றிக் கொள்வாள் அவள்.

தோழிகள்தான், ஹா.... ஏஸி... என்னமா இருக்கு? சிடிப்ளேயரா...? மியுஸிக்... காதல இனிமையா தேனைத் தடவுற மாதிரியில்லா விழுது... என வியந்து புகழ்வதை ரசித்துக் கொண்டே வருவாள்.

ஆனால் யதேச்சையாய் ஒரு நாள் கார் ரிப்பேர் ஆனதும் அதே தோழிகளுடன் டவுண் பஸ்ஸில் ஏறி வந்த அனுபவம் அவளது ரசனையையே மாற்றிற்று.

அடடா... இப்படி பிதுங்கும் பஸ்ஸில் பயணிகளோடு பயணிகளாய் நெருக்கடியடித்துக் கொண்டு. தள்ளு... முள்ளு... செய்து கொண்டு, தோழிகளுடன் சளசளவென பேசிக் கொண்டு... பஸ் ஜன்னல் வழியே. வேடிக்கை பார்த்துக் கொண்டு... வரும் சுகமே தனி! என அந்த பஸ் சுகம் அவளுக்குப் பிடித்துப் போனது.

அன்றிலிருந்து காருக்கு பெரும் டாட்டா காட்டிவிட்டு பாஸ் வாங்கி பஸ்ஸில் செல்லுமளவுக்கு டவுண் பஸ் உறுப்பினராகி விட்டாள் மதுமதி.

அன்றும் வழக்கம் போல் அப்படி பஸ்ஸுக்காக தோழியருடன் ஸ்டாப்பில் காத்துக் கொண்டிருந்தாள். வழக்கம் போல் டி.வி. சினிமாவில் ஆரம்பித்து... பேச்சு புதிய தமிழ் மிஸ் மங்கையற்கரசி வரை கேலியும் கிண்டலுமாய் ஒரே ரகளையில் சென்று கொண்டிருந்தது.

தோழிகள் சூழ்நிலையை எல்லாம் பொருட்படுத்தாது கெக்க பிக்கவென அதிவலையாய் சிரித்துக் கொண்டிருந்தபோதுதான் தற்செயலாய் எதிர்புறம் திரும்பிய மதுமதி அதை கவனித்தாள்.

எதிர்புறமான... பேங்க் கிளை ஒன்றின் பக்கம் பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் செய்து கொண்டிருப்பது... சாட்சாத் கண்ணன் தான்!

தூத்திடில் இருந்து பார்த்தால் கூட பளீரென வெண்மையில் அந்த வெள்ளைச் சீருடை அழகும். சுருள் முடிக்கற்றைகள் காற்றில் சிலுசிலுக்க... கம்பீரமாய் திரும்பும் முகம் அந்த ஆளுமையான பர்ஸனாலிட்டி... சந்தேகமில்லை.... அது... அந்த அன்பு இல்லம்... கண்ணனே தான்!

மறுகணம் தன்னை மறந்த உற்சாகமாகி விட்டாள் மதுமதி.

கண்ணன்...! கண்ணன்...! எனக் கூவியபடி எதிர்புறம் நோக்கி ஓட ஆரம்பித்து விட்டாள்.

தோழிகள் திகைத்து. ஏய்... ஏய்... நில்லுடி... பஸ் வரும் நேரம்... என பரபரத்ததை காதில் போட்டுக் கொள்ளாமல் ஓடியவள் மூச்சிரைக்க கண்ணன் முன்தான் போய் நின்றாள்.

அவன் கண்ணனும் தற்செயலாய் நிமிர்ந்தவன் அவள் சட்டென தன் முன் தோன்றி நிற்பதைப் பார்த்து திகைப்புடன் புருவம் உயர்த்தினான்.

மறுகணமே அவளை அடையாளம் கண்டு கொதண்டதற்கு அடையாளமாய் அவன் கண்கள் ஜொலித்துச் சிரித்தது.

அந்த கண்கள் சிரிக்கும் அழகை ஆசையாய் பார்த்தவள் பதிலுக்கு தன் முத்துப் பற்கள் அத்தனையையும் காட்டி நின்றாள்.

அவள் அப்படி நின்றதை ஒரு கணம் உற்றுப் பார்த்த அவன் முகம் மெல்ல மாறியது.

அடுத்து அவன் வீசிய கேள்வி அவளைப் பெரிதும் அதிர வைத்தது.

யார் நீங்கள்? என்றான் சற்றும் அவளை தெரியாதவனாய். மதுமதிடி பதறத்தான் செய்தாள். ஹாய்... என்னைத் தெரியவில்லை... இரண்டு நாள் முன்பு உங்கள் ஆசிரமத்திற்கு வந்து... பிறந்த நாள் கொண்டாடினேன்



அல்லவா? மது.... மதுமதி.... தொழிலதிபர் ராஜமாணிக்கம்... ஹி... இஸ்... மை. டாடி....

அவள் படபடவென சொல்ல அவன் அப்போது தான் ஞாபகத்திற்கு வருவது போல் தலையை அசைத்தான்.

மறந்து விட்டேன். ஞாபகம் வருகிறது.... என்றான்.

இரண்டு நாள் முன்பு பார்த்து. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அவனுடன் விழுந்து விழுந்து பேசியும்... நம்மை மறந்து விட்டானா? பெரும் ஞாபக மறதிக்காரனா... அல்லது அவன் மனதில் பதியவோ... அவன் ஞாபகம் வைத்துக் கொள்ளும் அளவுக்கு அவள் இல்லாமல் போய் விட்டாளா?

வியந்தாலும் சிறிது ஏமாற்றம் அடைந்தவள் போல் தான் அவனையே பார்த்தாள். அவன் பைக்கின் சிறு பெட்டிகளிலிருந்து பேங்க் பாஸ் புக்குகள் சில ரசீதுகள் எடுத்துக் கொண்டு பேங்க் பாஸ் புக்குகள் சில ரசீதுகள் எடுத்துக் கொண்டு பேங்க் உள்ளே செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஆகவே.... விடாமல், கண்ணன் ஸார், நான் இங்கு குயின்ஸ் கல்லூரியின் இளங்கலை இரண்டாம் ஆண்டு படிக்கிறேன். காலேஜ் லைஃப் ஒரே ஜாலிதான். இதோ... இங்கு பஸ் ஸ்டாப்பில் தோழிகளுக்காக காத்துக் கொண்டிருக்கும்போது தற்செயலாய் உங்களைப் பார்த்ததும் ஓடி வந்து விட்டேன்.... என்றாள் மறுபடியும் மூச்சு வாங்க.

அவள் அவ்வளவு பரபரத்துச் சொன்னதற்கு சலனமே கொள்ளாதவன்போல, அப்படியா? என்றான் சாதாரணமாய்.

அத்தோடு, சரி... வருகிறேன்... என வார்த்தைகளை அவளை நோக்கி உதிர்த்துவிட்டு விடுவிடுவெ பேங்க் நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

என்ன இது...? நின்று ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிச் சென்றால் குன்றந்தா போய் விடுவான்? அப்படியென்ன அவசரம் அவனுக்கு?

அவள் புரியாவிட்டாலும் காந்த சக்தியால் ஈர்க்கப்பட்டவள் போல் அவன் பின் தொடர்ந்தாள்.

உள்ளே சென்ற அவன் அங்குள்ள பணியாளரிடம் பாஸ்புக்குகளை கொடுத்துவிட்டு சில பாரங்களை எடுத்து எழுத ஆரம்பித்தான்.

இங்குதான் ஆசிரமத்தின் அக்கவுண்ட் வைத்திருக்கிறீர்களா?

அவள் கேட்டதற்கு நிமிராமலே லேசாய் தலையசைத்து விட்டு வேலையிலே கவனமாய் இருந்தான்.

சரி... முடிக்கட்டும் என்பது போல் மதுமதி நினைத்தவள் தன்னைக் கவனிக்காத அவனை மீண்டு மொருமுறை புதுசாய் பார்ப்பது போல் அளவெடுத்தாள்.

அந்த நெடு உயரம்... ஆளை ஊடுருவும் தீர்க்கமான பார்வை, சுருளான முடி தவழும் பரந்த நெற்றி, கூரான மூக்கு, முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை, நடை, உடை பாவனையில் ஒருவித அசாத்திய வேகம் முகத்தில் அந்த கம்பீரக் களை... அசாத்தியமான ஒரு புன்னகை....

சொல்லப் போனால் ஹேண்ட்சம் பர்ஸனாலிட்டி... என்று சொல்வார்களே... அது இதுதானா?

தன்னை மீறி வியந்தவள் தான் இப்படி வைத்த கண்ணாய் அவனைப் பார்ப்பது கண்டு அதிசயிக்கவும் செய்தாள்.

அவள் இதுவரை சந்தித்த எந்த ஆண்களையும் எந்த டிப்டாப் ஆசாமிகளையும் ஒரு முறைக்கு மேல் திரும்பிப் பார்த்ததில்லை. பார்க்கத் தூண்டியதில்லை.

ஆனால் இன்று...

இவனிடம் உள்ள எதுவோ ஒன்று அவளை இழுக்கிறது.

வெட்கத்தை விட்டுப் பார்க்கும் அளவுக்கு அவள் போய் விட்டாளே!

தன்னைத்தானே நொந்து கொண்டவள் அது பற்றியெல்லாம் மீண்டும் யோசித்துக் குழம்பாமல் மறுபடியும் அவன் பக்கம் போனாள். பற்களைக் காட்டினாள்.

வேறு எதுவும் உதவி தேவையா? நான் செய்யக் காத்திருக்கிறேன்... என்றாள்.

எனக்கு எந்த உதவியும் தேவையில்லை....

பதிலடியாய் சட்டென அந்த பதில் அவனிடம் இருந்து வந்தது.

கவுண்டருக்கு சென்று அவன் பணம் செலுத்த அவளும் பின்னாலே சென்றாள். அவள்தான் அப்படிப் பின் தொடர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் தவிர... அவன் அவளை சற்றும் கவனியாமல் தனது வேலைகளிலே கவனமாயிருந்தான்.

சொல்லப் போனல் அப்படி ஒருத்தி தன்ட பக்கத்தில் நின்று பேசக் காத்திடிருப்பவள் போல் சிரிப்புடன் நிற்பதைக் கூட அவன் உணர்ந்த மாதிரித்



தெரியவில்லை. அவன் பாட்டுக்கு மற்றொரு செலானை எடுத்தான். விறுவிறுவென எழுதி கவுண்டரில் பணத்தைக் கட்டினான்.

பின் தன் வேலை முடிந்து விட்டது போல் பேங்கில் இருந்து கிளம்பவும் ஆரம்பித்து விட்டான்.

மதுமதிக்கு ஒரே ஆச்சரியம் தான்! இப்படி ஒருவன் எங்காவது இருப்பானா?



# 3



கண்ணன் இப்படி இருப்பதற்கு ஏதாவது தகுந்த காரணம் இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தாள் மதுமதி.

அதனாலே முதலில் அதைக் கண்டு பிடிக்க வேண்டும். அவனைப் பற்றி முழுமையாய் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள் அவள்.

அதிலும் கண்ணன் தாய் தந்தையற்ற அனாதையாய் ஆர்ப்பனேஜ் ஒன்றில் வளர்ந்து உருவானதாய் ராஜமாணிக்கம் சொன்னது அவன் மேல் ஒருவித இரக்கத்தையும் உண்டு பண்ணியிருந்தது அப்படி அவன் அன்புக்காக ஏங்கி அனாதையாய் வளர்ந்ததினாலே இப்படி ஒரு அன்பு இல்லம் உருவாக்க வேண்டும் என லட்சியத்தோடு செயல்பட்டு உருவாக்கி இருக்கலாம்.

இருந்தாலும் அவன் வளர்ந்த சூழ்நிலையை தெரிந்து கொள்ள விரும்பினாள் மதுமதி. தந்தை மூலம் ஒரேயொரு தகவல்தான் அவளுக்குக் கிடைத்தது. கண்ணன் வளர்ந்தது படித்தது எல்லாம் செயிண்ட் ஜோசப் ஆர்ப்பனேஜ் எனப்படும் அனாதை இல்லம் ஒன்றில்தான் அதை மறுநாளே கல்லூரிக்கு லீவு போட்டுவிட்டு தேடிப் போனாள் மதுமதி.

நகரின் ஒதுக்குப்புறமாய் சிறிய பரப்பளவில் அமைதியாக இருந்தது செயிண்ட் ஜோசப் ஆர்ப்பனேஜ். ஃபாதர் தாமஸ் அதை நிர்வகித்து வந்தார். ஃபாதர் தாமஸுக்கு அறுபதைக் கடந்த வயது. இருந்தும் இளம் வயதுக்காரரைப் போல் துறுதுறுவென உற்சாகமாய் இருந்தார்.

மதுமதியை உற்சாகமாகவே வரவேற்றார். மதுமதி முதலிலே கண்ணன் பற்றிய விசாரிப்புகளை ஆரம்பிப்பது சரியல்ல... என உணர்ந்தவள் ஆசிரமம் பற்றி அங்கு உள்ளோரோடு பிறந்த நாள் மற்றும் சுப நிகழ்ச்சிகள்

கொண்டாடுவது பற்றியெல்லாம் விசாரிக்க வந்திருப்பதாய் கூற... பெரும் மகிழ்ச்சியடைந்தவராய் அது பற்றியெல்லாம் விளக்க ஆரம்பித்தார் தாமஸ்.

முன்னேற்பாடாய் அந்த மெர்ஸி ஹோமுக்காக தந்தையிடம் இருந்து வாங்கி வந்த சிறு அன்பளிப்பு காசோலையையும் ஃபாதரிடம் கொடுத்தாள். அப்படியே கண்ணன் நடத்தும் விட்டில் ஃப்ளவர் ஆசிரமத்திற்கு தான் சென்றது பற்றி கூறி விட்டு மெல்ல கண்ணனைப் பற்றி விசாரிக்க ஆரம்பிக்க ஆரம்பித்து விட்டாள் மதுமதி.

ஃபாதரும் கண்ணனைப் பற்றி உற்சாகம் பொங்கியவராய்த்தான் பேச ஆரம்பித்து விட்டார். ஃபாதர் சொன்ன விஷயங்களைக் கேட்டு பெரும் ஆச்சரியம் தான் கொண்டாள் அவள். கண்ணன் பிறப்பில் அனாதை இல்லை என்றும் பெரும்பணக்காரர் ஒருவர் மகனாகத்தான் பிறந்தான் எனவும் அவனது தந்தை மறு திருமணம் செய்து சித்தி என்ற பெயரில் நிறைய இன்னல்களை கொடுமைகளை சிறு வயதில் சந்தித்ததாகவும் ஒரு நாள் அவனது தந்தையே அவன் ஆதரவற்ற அனாதை என்று கூறி இங்கு சேர்த்து விட்டு சென்று விட்டதாகவும் அறிவித்தார்.

சிறு வயதில் கண்ணனுக்கு ஏற்பட்ட அந்த மனக்காயமே எதிர்காலத்தில் சிறுவர்க்கான அன்பு இல்லம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை லட்சியம் போல் வித்திட்டதையும் தெரிந்து கொண்டாள்.

அலுவலக ஆலபங்களில் இருந்த கண்ணனது சிறுவயது புகைப்படங்களை எல்லாம் வாங்கி ஆவலாய்ப் பார்த்தாள். கண்ணனைப் பற்றி போதுமான விபரங்களைத் தெரிந்து கொண்டாயிற்று என்ற திருப்தியுடன் ஃபாதரிடம் விடைபெற்றுக் கிளம்பினாள் அவள்.

அன்று இரவு வீட்டிற்கு வந்தவள் தூங்கப் பிடிக்காமல் ஃபாதர் சொல்லிய விஷயங்கள் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தாள். அந்த சிறு வயதில் பிஞ்சு மனதை கண்ணன் சித்தியின் கொடுமைகளால் எப்படியெல்லாம் துடித்திருப்பான் என்ற நினைப்பு அவளுள் ஓடியது. அதைவிட பெற்ற தந்தையே அவனை அனாதை என்று கூறி அனாதை இல்லத்தில் சேர்த்திருப்பதை உணரும் போது எவ்வளவு காயப்பட்டிருப்பான்... என கண்ணனுக்காக கவலைப்பட்டுத் தவித்தாள் அவள்.

அப்படி அந்த தந்தைக்கு இளம் பாலகனான கண்ணனை அப்படி அனாதை இல்லத்தில் கொண்டு வந்துவிட எப்படி மனம் வந்தது? அவ்வளவு கல்நெஞ்சமா அவருக்கு?



அதை விடுவோம். அப்படி தனக்காக சொந்த உறவுகள் இருந்தும் யாரும் இல்லாத அனாதையாய் மெர்ஸி இல்லத்தில் படித்து வளர்ந்திருக்கிறான். ஹாஸ்டல் வாசம் போல் பாசங்களை உணராது வாழும் அந்த வாழ்க்கை எவ்வளவு கொடுமையானது? அதை இவ்வளவு இளம் வயதிலேயே கண்ணன் அனுபவித்து வேதனையில் உழன்றிருக்கிறான்!

யோசித்தவளுக்கு கண்ணனின் குணம் ஆச்சரியத்தையும் உண்டு பண்ணியது. அவ்வளவு காயங்களை அனுபவித்தவன் எதுவுமே நடவாதது போல் எப்போதும் இன்முகமாய் அன்பொழுக பேசி கனிவாய் நடந்து கொண்டு.. உற்சாகமான மனநிலையில் எப்போதும் இணைத்துக் கொண்டு... நினைத்தவள், ரைட்! ஹி இஸ் ரியலி எ ஜெண்டில் மேன்... ! என்றாள் தன்னையறியாமல் வாய் விட்டு.

யாரம்மா அந்த ஜெண்டில்மேன்? என்ற குரல் சட்டென கேட்கவும் உணர்வுக்கு வந்து திரும்பினாள் மதுமதி.

புன்னகையுடன் பின்னால் நின்று கொண்டிருந்தார் ராஜமாணிக்கம்.

அவரைப் பார்த்ததும் மனப்பாரம் இறங்கியவள் போல் பற்கள் அனைத்தையும் காட்டி கலகலவெனச் சிரித்தாள் மதுமதி.

ஓ... டாடி...! நீங்கள் எப்போது வந்தீர்கள்? என்றாள்.

பதிலுக்கு குறும்பாய்ச் சிரித்தவர், நீ... உன் அழகான தலையைச் சாய்த்து பெரும் சிந்தனைக்குப் போனாயே... அப்போதே வந்து விட்டேன். என்னம்மா விஷயம்? யாரை ஜெண்டில்மேன் என்று சொன்னாய்? எனக் கேட்கவும் விவரிக்க ஆரம்பித்தாள் மதுமதி.

தான் கண்ணன் வளர்ந்த செயிண்ட் ஜோசப் ஆர்ப்பனேஜ் சென்றதை அங்கு கண்ணனைப் பற்றிய விபரங்கள் அறிந்ததை எல்லாம் தந்தையிடம் ஆச்சரியத்துடன் கூறினாள் அவள்.

ராஜமாணிக்கத்திற்கும் வியப்புதான்! என்ன... கண்ணனைப் பெற்ற தந்தையே அனாதை எனக் கூறி சேர்த்து விட்டுச் சென்றிருக்கிறாரா.. கொடுமை தான்...! என இரக்கப்பட்டவர்வேறு ஏதோ தோன்றியவராய் மதுமதியின் பக்கம் வந்தார்.

அவளின் கண்களை நேருக்கு நேர் பார்த்தார்.

மது....

யெஸ் டாடி...

நான் இப்போ ஒரு கேள்வி கேட்பேன். அதுக்கு நீ சரியா பதில் சொல்லணும்....

கேளுங்க டாடி....

கண்ணன் விஷயத்தில நீ ஏன் இப்படி அக்கறை காட்டுறேன்னு தெரிஞ்சுக்கலாமா?

அக்கறைன்னா...?

அவன் கண்ணனைப் பற்றி மேலும் மேலும் தெரிஞ்சுக்க ஆசைப்படுறதுக்குக் காரணம்?

டாடி தன்னையே உற்றுப் பார்த்துக் கேட்க புருவம் உயர மை விழிகளை விரித்து விழித்தாள் அவள்.

எனக்கே தெரியலை டாடி...! கை விரல்களை விரித்துச் சிரித்தாள்.

எனக்குத் தெரியும்... என்றார் ராஜமாணிக்கம் பூடகமாய்.

தெரியுமா... என்ன டாடி?

யு... ஆர்... இன்... லவ்..!

என்னது?

யெஸ்... நீ விரும்புற கண்ணனைக் காதலிக்கிற!

இன்னொரு தரம் சொல்லுங்க....

நீ கண்ணனைக் காதலிக்கிற...

டாடி... கேட்கவே இனிமையாத்தான் இருக்கு. அப்படித்தான் இருக்கு. அப்படித்தான் இருக்குமோ?

இப்படி... தானா.. மனசுல பூத்து கனியறதுதான் காதல். அப்படித்தான் கண்ணனைப் பற்றிய விஷயங்களை கேள்விப்பட்டதும் உன்கிட்ட சலனம் ஏற்பட்டு.... இனம் புரியாத தவிப்பு ஒன்றும் உண்டாயிட்டு...

ராஜமாணிக்கம் சொல்லச் சொல்ல மறுபடியும் கலகலவென வாய்விட்டுச் சிரித்தாள் மதுமதி.

என்ன மது சிரிக்கிற?

டாடி... நாம பேசறதை இப்போ யாரும் கேட்டா என்ன நினைப்பாங்க தெரியுமா?

என்ன நினைப்பாங்க?

நல்ல... அப்பா... அவருக்கேத்த பொண்ணு வந்து வாய்ச்சிருக்காங்கன்னு சொல்லிச் சிரிப்பாங்க....

நல்லாச் சிரிக்கட்டும். நாமும் கூடச் சேர்ந்து சிரிச்சுக்குவோம்...



இம்முறை சிரித்த மதுமதி கைகட்டிக் கொண்டு ராஜமாணிக்கத்தை வியப்பாய் பார்த்தாள்.

டாடி... உங்களுக்கு என் மேல கோபம் வரல?

நான் எதுக்கும்மா கோபப்படணும்?

உங்க பொண்ணு இன்னிக்கு காலேஜுக்கு மட்டம் போட்டுட்டு... கண்ணனைப் பற்றி தெரிஞ்சுக்கிறதுக்காக அலைஞ்சிருக்கா. இது உங்களுக்குக் கோபத்தை ஏற்படுத்தல?

மதுமதி கேட்டதற்கு அசராமல் சிரித்து அவள் தலையைச் செல்லமாய் தட்டினார் அவர்.

நல்ல பொண்ணும்மா நீ..! எனக்கு என் மகளைப் பற்றித் தெரியாதா? அவ எது செஞ்சாலும் சரியாத்தான் இருக்கும். ஷீ இஸ்... வெரி... இன்டலிஜென்ட்! அதுதான் என்னோட நம்பிக்கை....

அதுக்காக அவ யாரையாவது காதலிச்சாக்கூட...?

மதுமதி.. வார்த்தைகளை முடிக்காமல் இழுக்க.. மறுபடியும் கடகடச் சிரிப்பு சிரித்தார் ராஜமாணிக்கம்.

நீ யாரையாவது அப்படி காதலிக்கணும். அதான் என்னோட ஆசை..! என்றார் அவளை மொத்தமும் அதிர வைத்தவாறு.

என்னது உங்கள் ஆசையா?



## 4



மறுநாள் மதுமதியால் சும்மா இருக்க முடியவில்லை. அவனை கண்ணன் பார்க்க வேண்டும் பேச வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது.

அதற்காக சும்மா ஆசிரமத்திற்குப் போய் நின்றால் அவன் பேசுவானா? சிரிக்கக்கூடச் செய்யாமல் எரிந்து விழுவானே!

என்ன செய்வது?

யோசித்தவளுக்கு பளீரென பிறந்த நாள் ஞாபகம் தான் வந்தது.

கையில் இருக்கும் இரண்டாயிரம் ரூபாய் பணமும் உணர்வுக்கு வர மறுகணமே பிளான் செய்து விட்டாள் மதுமதி.

அன்று மதியம் மறுபடியும் காலேஜுக்கு கட் அடித்துவிட்டு தோழி மைதிலியுடன் ஆசிரமம் நோக்கிக் கிளம்பிவிட்டாள்.

எங்கடி போறோம்? என பரபரத்தவளிடம்.

இன்று உனக்கு பிறந்த நாள் ஹேப்பி பர்த்டே... கொண்டாடப் போகிறோம். அதுவும் அன்பு ஆசிரமத்தில் வைத்து... அதற்காக இரண்டாயிரம் ரூபாய் நன்கொடையும் நீ கொடுக்கப் போகிறாய்... என்றாள் அவளை அசர வைத்தவாறு.

என்னடி... சொல்கிறாய்... மது? எனக்கு இன்று பிறந்த நாள் கிடையாதுன்னு உனக்கு நல்லாத் தெரியும். உனக்க அந்தக் கண்ணனைப் பார்க்கணும் அவ்வளவுதானே...? பேசாம நேரடியா ஆசிரமம் சென்று பார்க்க வேண்டியதுதானே?

பார்க்கலாம். ஆனா கண்ணன் சரியா முகம் கொடுத்துப் பேச மாட்டார்....

அதற்காக... பொய் கூட சொல்லிக்கலாம. ஆனா இந்த ரெண்டாயிர ரூபாய் நன்கொடைன்னு... சொல்லி... பணம் கொடுக்கணுமா?

வேற வழி இல்லையே..! கைகளை விரித்துச் சிரித்தாள் மதுமதி. மைதிலி. அந்த கண்ணனை இம்ப்ரஸ் பண்ண பேச வைக்க இது ஒன்று தான் வழி... கமான்... வா... போகலாம்...! என வலுக்கட்டாயமாய் மைதிலியை இழுக்க... தலையிலடித்துக் கொண்டு வேறு வழியில்லாமல் அவளைப் பின் தொடர்ந்தாள் மைதிலி.

எல்லாமே மதுமதி நினைத்தது போல் சரியாகத்தான் நடந்தது. தோழி மைதிலி பிறந்த நாள் கொ;டாட வந்திருக்கிறாள். இதோ டொனேஷன்... என ஆசிரமத்தில் தகவலைச் சொன்னதும் கண்ணன் புன்னகையுடன் எதிர்கொண்டு விட்டான்.

பழைய இன்முகப் புன்னகை அன்பான பேச்சு... கண்கள் சிரிக்கப் பார்க்கும் லாவகம்... அட... எல்லாமே அவனிடம் அப்படியே இருக்கிறதே.. என வியக்கத்தான் செய்தாள்.

ஆனால் அவன் நன்கொடை கொடுத்தது மைதிலி தான் என நினைத்துக் கொண்டு மைதிலிக்கு முக்கியத்துவம் கொடுத்தே பேச்சு



கொடுக்க ஆரம்பிக்க... கண்ஜாடையாலே மைதிலிக்குக் கட்டளையிட்டாள் மதுமதி.

மறுநிமிடமே பேசா மடந்தை போல் கப்சிப் ஆகிவிட்டாள் மைதிலி. கண்ணனுக்கு வேறு வழி இல்லாது போயிற்று. மதுமதியிடம் பேச வேண்டிய சூழலே உண்டாயிற்று.

இம்முறை விடக்கூடாது என மதுமதி அவனைப் பற்றியே தீவிரமாய் விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்.

கண்ணன் தன் ஆசிரம வேலைகளை கவனிப்பதற்காகவே சார்டர்ட் அக்கவுண்டிங் படித்துவிட்டு ஆடிட்டர் பணியில் சொந்தமாய் பார்த்து வந்தான். நகரின் முக்கியமான பெரிய கம்பெனிகள் சிலவற்றுக்கு அவன் தான் அடிட்டர். மேலும் அப்பணிக்காக தன் ஆசிரம இடத்திலேயே நாலைந்து ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி அலுவலகம் போல் ஆக்கிக் கொண்டான்.

சுருக்கமாய் சொன்னால் வெளியே வரும் நேரங்களைத் தவிர மற்ற நேரம் முழுவதும் அவனது இடம் அவனது உலக ஆசிரமம்தான். அப்படி அந்த ஆதவற்ற பிஞ்சுகளுடன் பொழுதை கழிப்பதையே சந்தோஷமாய் பெரும் பாக்யமாய் கருதினான்.

மதுமதிக்கு அவனைப் பற்றித் தெரிய அவளுக்கும் அந்த அன்பு இல்லம் மேல் இனம் புரியாத பற்று வளர ஆரம்பித்தது.

அன்றும் அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுடன் நேரம் போவது தெரியாமல் கொஞ்சிக் குலாவி விளையாடினாள். மைதிலி புரியாதவளாய், இதில் எல்லாம் எனக்கு இன்ட்ரஸ்ட் கிடையாது... என முகம் சுழித்தபோது அவள் தோள்களைத் தட்டி விளக்கினாள். அந்தச் சிறுவர் சிறுமியர் நடத்தும் இன்னிசைக் குழு பற்றி விவரித்து அவர்களது இசையைக் கேட்க வைத்தாள். மைதிலி மகிழ்ந்தவளாய் தலையாட்டியபோது அவளுக்கும் மகிழ்ச்சியாய் இருந்தது.

ஒருவாறு பிறந்த நாள் மைதிலிக்குக் கொண்டாடும் சாக்கில் அப்படி ஆசிரமத்தில் இரண்டு மணி நேரம் போனதே அவளுக்குத் தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேல் கண்ணனுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது அவளைப் பரவசப்படுத்தியது.

ஆனால் இத்தோடு சரி மறுநாள் அல்லது மறுமுறை எதாவது காரணம் வைத்துக் கொண்டுதானே ஆசிரமத்தினுள் முடியும்? எதைக் காரணம் காட்ட...? என்ற கவலையும் அவளுக்கு வந்து விட்டது.

தீவிரமாய் யோசித்தவள் கல்லூரி நேரம் போக மற்ற நேரங்களில் சோஷியல் சர்வீஸ் போல் தினம் ஆசிரமம் வந்து செல்ல... அனுமதிக்குமாறு அவள் கண்ணனிடம் கேட்டபோது புருவம் உயர முகம் சுருக்கினான் அவன்.

அவள் நோக்கத்தைப் புரிந்து கொண்டானோ என்னவோ, அது தேவையில்லை என நினைக்கிறேன். இங்கு ஆசிரம வேலைகளைப் பராமரிக்கப் போதுமான ஊழியர்கள் இருக்கிறார்களே...! என்றதும் அவள் முகம் சுண்டிப் போயிறறு.

வேறு... என்ன வழி? என சிந்தித்தவளுக்கு நன்கொடை விஷயம்தான் ஞாபகத்திற்கு வந்தது. தினம் தினம் இப்படி ஆசிரமத்திற்கு நன்கொடை கொடுப்பது அவளால் முடியாத காரியம். ஆனால் அதுவே அவளுக்குத் தெரிந்தவர்கள், தோழிகள், வசதியனா கம்பெனி நிர்வாகிகள் என தேடிப் பிடித்து அவர்களிடம் ஆசிரமத்திற்காக நன்கொடை வாங்க முயற்சிக்கலாமே? அப்படி தினம் கிடைக்கும் நன்கொடைகளை கொடுக்கும் சாக்கிலாவது இங்கு ஆசிரமத்திற்கு வரலாமே... கண்ணனை தினம் பார்க்கலாமே? அப்படி அவள் செய்தால் அதற்குக் கண்ணனால் தடை போடவும் இயலாதே?

யோசித்தவள் அதுவே சரியான வழி என தீர்மானித்து மறுநாளே காரியத்தில் இறங்கினாள். முதலில் தன் பணக்காரத் தோழிகளை வரிசைப்படுத்திடி அவர்களை மெல்ல நச்சரிக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அவள் டொனேஷன் நன்கொடை என ஆரம்பித்ததும் ஆள் ஆளுக்கு ஐயையோ... நம்மால் முடியாதப்பா...! என தலைதெறிக்க ஓட்டம்தான் பிடித்தனர்.

தந்தை மூலம் அறிந்த கம்பெனி நிர்வாகிகளை சந்தித்து நன்கொடை பற்றி பேசியபோதும் அவர்களும் எவ்வித உறதியும் கொடுக்காமல் நழுவவே செய்தனர்.

ம்ஹூம்! இந்த வழி சரிப்பட்டு வராது. வேறு வழிதான் கண்டு பிடிக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள் மதுமதி.



அதற்குள் நாலைந்து நாட்கள் ஓடிவிட்டதால் கண்ணனை பார்க்கவில்லை என்ற தவிப்பு வேறு வந்து ஒட்டிக் கொண்டது. அவளது வாடி முகத்தை உற்றுக் கவனித்டத ராஜமாணிக்கம் அன்றே கேட்டும் விட்டார்.

விஷயத்தை முழுவதும் விவரித்தாள் மதுமதி.

அவள் இரண்டாயிர ரூபாய் பணத்தை தோழிக்குப் பிறந்த நாள் என நாடகமாடி கண்ணனைப் பார்க்கப் போனதை சொல்லியும் கொஞ்சமும் கோபப்படாமல் கடகடவென சிரித்தார் அவர்.

மதுமதிக்கே ஆச்சரியம்!

என்ன டாடி... உங்களுக்கு கோபமே வராதா? என்றாள் அதே வியப்புடன்.

எதற்குக் கோபப்பட வேண்டும்? என்றார் ஒன்றும் புரியாதவர் போல்.

உங்களிடம் கேட்காமல் கண்ணனைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இரண்டாயிரம் ரூபாய் பணத்தை வீணடித்திருக்கிறேன்... இதே நிலையில் மற்ற அப்பாக்கள் என்றால்... தாம் தூம்மென குதித்து ரகளை பண்ணி விடுவார்களே...!

அதற்கும் அடக்க முடியாமல் சிரிக்கத்தான் செய்தார் ராஜமாணிக்கம். என்ன... ஸ்வீட்டி... என்னை நீ புரிந்து கொண்டது அவ்வளவுதானா? நான் யார்...? உன் செல்லமான... ப்ரியமான டாடி அல்லவா? நான் எதற்கு குதிக்கப் போகிறேன்? நீ செலவழித்த இரண்டாயிரமும் கண்ணனைப் பார்க்க என்றாலும்... அது ஆசிரமத்துக்கான கொடுக்கப்பட்ட நன்கொடைதானே? மேலும்... நான்டதான்... என்றோ... உன் காதலுக்கு பச்சைக் கொடி காட்டி விட்டேனே... நீ இன்னும் பார்க்கவில்லை...? என்றபடி தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த பச்சை நிற கர்ச்சிப்பை எடுத்து கொடி போல் விசிறியும் காண்பித்தார் சிரிப்புடன்.

உனக்காக பச்சை நிறத்தில் தேடிப்பிடித்து கர்ச்சிப் பேறு வாங்கி வைத்திருக்கிறேன் பார்... என்று சொன்னபோது மதுமதியாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

ஐயோ...! டாடி..! அது காதல் என்றே முடிவு பண்ணி விட்டீர்களா? என்றாள் ஒருவித ஏக்கமான பார்வையுடன்.

அட... இன்னமும் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயா? அதுதான் கண்கள் தேட ஆரம்பித்து விட்டதே... கண்ணனைப் பார்க்க வேண்டும் என்று தவிக்க ஆரம்பித்து விட்டதே...!

ராஜமாணிக்கம் சொல்ல தன் முகத்தில் எந்த உணர்ச்சியைக் காட்ட... எப்படி புரிய வைப்பது என்பது புரியாமல் மை விழிகளை விரித்து அழகாக விழிக்கத்தான் செய்தாள் அவள்.

உன் கவலையை விடு. கண்ணனைப் பார்க்க நான் ஏற்பாடு பண்ணுகிறேன்... என்றார் அவர் அவளை அதிர வைத்தவாறு.

எப்படி டாடி?

ரொம்ப சிம்பிள் மது! அவரை நம் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கப் போகிறேன்...

வீட்டு... விருந்துக்கா...?

மது, நான் முன்பே கண்ணனை நம் வீட்டுக்கு அழைச்சு வந்து நம் பேமிலி மெம்பர்ளை எல்லாம் அறிமுகப்படுத்தணும்னு ஒரு நினைப்பு வைச்சிருந்தேன். சரியான சந்தர்ப்பம் அமையாததால் அது தள்ளிப் போய்க்கிட்டே இருந்துச்சு. இப்போ... தான் அதற்கான டயம் வந்திருக்குன்னு நினைக்கேன்...

நீங்க கூப்பிட்டா... கண்ணன் வருவாரா டாடி?

நிச்சயம் வருவார். நானும் கண்ணனும் இன்று நேற்றல்ல... அஞ்சு வருஷ பழக்கம். மேலும் நான் ஆசிரமத்திடிற்கு நன்கொடையா நிறைய பணத்தை வாரி வழங்கியிருக்கேன். அதனால நான் கூப்பிட்டா... கண்ணன் கண்டிப்பா வருவார்.....

அப்பா... நாளைக்கே கூப்பிடுங்க...! என்றாள் மதுமதி.

உத்தரவு..... மகாராணி! பவ்யம் காட்டிச் சிரித்தார் ராஜமாணிக்கம்.

ராஜமாணிக்கம் சொன்னபடியே மறுநாள் கண்ணன் வருவதற்கு தொலைபேசியில் பேசி ஏற்பாடும் செய்துவிட்டார்.



மதுமதிக்குத்தான் பரபரப்பு பற்றிக் கொண்டது. கண்ணன் நம் வீட்டிற்கு வரப் போகிறான்... அவனை வரவேற்க வேண்டும். வரவேற்று நம் ரூமில் வைத்து மணிக்கணக்காய் பேச வேண்டும் என நினைத்தவள் குப்பை போல் சிதறிக் கிடக்கும் பொருள்களுடன் இருந்த தனது ரூமை அவசர அவசரமாய் ஒழுங்கு படுத்தினாள். கண் சுவர் இயற்கை ஓவியங்களை ஒட்டி அழகு படுத்தினாள்.

எல்லாவற்றையும் யோசித்து யோசித்து செய்தவள் கண்ணன் வந்தபோது அவள் சற்றும் யோசிக்காத ஒன்றையும் செய்தாள்.

தன் ரூமின் உள்ள அலங்கார பொருட்களை எல்லாம் கண்ணன் வியந்து பார்த்தவாறு இருந்தபோது... அவன் சற்றும் எதிர்பாராத அந்த தருணத்தில்.... அந்த விபரீத காரியத்தை செய்தான் அவன்.



## 5



மதுமதி கண்ணன் வீட்டிற்கு வந்ததும் பரபரப்பாய்தான் ஆகி விட்டாள். ஆட்டோவில் தோளில் ஜோல்னா பை சகிதம் வந்து இறங்கியவனை வாசல் கேட்டுக்கே சென்று வரவேற்று உள்ளே அழைத்துவந்தாள்.

புன்னகைத்தாலும் ஒருவித கூச்சத்துடனே கண்ணன் வருவதாய் அவளுக்கப் பட்டது. அதற்குள் முன் ஹாலில் இருந்து ராஜமாணிக்கமும் வந்துவிட பெரிய நமஸ்கரிப்பு ஒன்றைச் செய்தான் அவன்.

தந்தை மீது அவன் காட்டும் மரியாதையைக் கண்டு உள்ளூர மகிழ்ந்தவள் தாயாருக்கும் அவனை அறிமுகப்படுத்த சுரத்தில்லாமல் தலையாட்டி வணங்கினாள் செண்பகம்.

ஐயா... உங்களது வார்த்தையை தட்ட முடியாது என்பதால்தான் நான் வந்தேன்... என்று கண்ணன் சொன்னபோது, உங்களை இங்கு வரவழைத்தது நான்தானே...! தன்னையறியாமல் சிறிது கத்தியவள் அவசரமாய் உதட்டையும் கடித்தாள்.

பெரிய விருந்தெல்லாம் தேவையில்லை. இரண்டு பிஸ்கட்டுகள், தேநீர் போதுமானது. நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்... என்றான் கண்ணன் மெல்லிய புன்னகையுடன்.

அதற்கும் கேலியாய் தலையாட்டிய மதுமதி, இரண்டு பிஸ்கட்டுகளும் தேநீருமா..? நோ...! நோ...! அது வெல்லாம் கூட் கிடையாது...! வெறும்... ஒரு கப்... குளிர்ந்த நீர்தான்... தண்ணீர்தான் தருவோம். பருகுகிறீர்களா? என்றாள் கிண்டலாய்.

இம்முறை கண்ணன் அடக்க முடியாமல் சிரித்தான். அவனது வசீகர பளீர் புன்னகையை ரசித்தவாறு...! முதலில் வீட்டைச் சுற்றிப் பாருங்கள்... என அழைத்துச் சென்றாள் அவள்.

ஒவ்வொரு அறையாய் காட்டி விளக்கியவள் அப்படியே தனது பிரத்யேக அறைக்கு கூட்டிப் போய் உட்கார வைத்தாள். கண்ணன் எவ்வித லயிப்பில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவள் சொல்வதை எல்லாம் சுவாரஸ்யமாய் கேட்பது போல் முகத்தை வைத்துக் கொண்டான்.

தான் வரைந்த ஓவியங்கள், தோழிகள் மூலம் கற்று உருவாக்கிய சிறுசிறு கைவினைப் பொருட்கள், வேலைப்பாடுகள் தனக்குப் பிடித்த புத்தகங்கள், இசையில் தனக்கு உள்ள ஈடுபாடு... என எல்லாவற்றையும் ஒரு சிறு குழந்தையின் ஆர்வத்துடன் அவனிடம் விவரித்துகக் கொண்டிருந்தாள் அவள்.

அவளுக்கே ஒரு கட்டத்தில் அவன் தான் சொல்வதையெல்லாம் கேட்கிறானா என்ற சந்தேகம் வந்துவிட்டது. என்ன கேட்கிறீர்களா? என கேட்டும் விட்டாள்.

கண்ணன் அதற்கு மெல்ல தலையசைத்தவன், கேட்கிறேன். ஆனால் இதையெல்லாம் எதற்குச் சொல்கிறீர்கள்? என்றான்.

மதுமதி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லையென்றாலும் சமாளித்தாள். உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். அதே போல் என்னைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாம்?

எதற்கு? என்றான் அவன் சட்டென.



வேறென்ன...? இரண்டு நண்பர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதில் தப்பில்லையே...!

புருவம் உயர்த்தி உற்றுப் பார்த்தவன் பார்வையைத் தாழ்த்தியபடி சிரித்தான். அவள் விடுவாளா..? இதுதான் சமயம் என தன் கைகளை வேண்டுமென நீட்டி அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கி ப்ரெண்ட்ஸ்... என அழுத்தமாய் உச்சரித்தாள்.

அவளது செய்கை அவனுக்கு மறுபடியும் சிரிப்பையே வரவழைத்தது. அந்த வாய்விட்டும் சிரிக்கும் அவனழகை மறுபடியும் ரசித்தாள் அவள்.

கூடவே இவனிடமட் எதாவது பேச்சு கொடுக்க வேண்டும். பேசிக் கொண்டிருக்க வேண்டும் என நினைத்தவள் ஆசிரம நிர்வாகம் பற்றி, வரும் நன்கொடைகள் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாள்.

கண்ணனுக்கு ஆசிரமம் பற்றி பேசுவது சுவாரஸ்யமான விஷயமாய் இருக்கவே... மடை திறந்த வெள்ளம் போல் கடகடவென விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

டோனர்கள் பற்றி பொது நிறுவனங்கள், சாரிட்டபிள் ட்ரஸ்ட் அளிக்கும் மாதாந்திர நன்கொடைகள் பற்றி, நிர்வாகம் செய்வதில் அவ்வப்போது ஏற்படும் பணப்பற்றாக்குறை பற்றியெல்லாம் விளக்கமாய் அவன் சொல்லி முடித்தபோது அவளுக்கு அசதியில் தூக்கம் வராத குறைதான்!

இருந்தாலும் அவன் நடித்தது போலவே ரசித்துக் கேட்கும் முகபாவனையோடு கேட்டுக் கொண்டிருந்தவள் அவனை அப்படியே டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றாள். தயாராய் இருந்த சிறிய உணவு விருந்தை பரிமாறினாள்.

உணவருந்தி முடிந்ததும் கிளம்பப் போனவனை இழுக்காத குறையாய் தன் ரூமின் பக்கம் உள்ள பால்கனிப் பக்கம் அழைத்துச் சென்றாள்.

என்ன விஷயம்... என்ன விஷயம்? என்றான் கண்ணன் புரியாதவனாய்.

ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்... என்றாள் அவள்.

முக்கியமான விஷயமா?

ஆமாம்... உங்களுக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டும்... என்றாள் மறுபடியும்.

பரிசா...? எனக்கா?

ம்ம்... நீங்கள் இங்கு என் வீட்டிற்கு வருகை புரிந்ததற்கான நினைவுப் பரிசு...

நினைவுப் பரிசா...? என கண்ணன் மறுபடியும் விழிக்க ஆரம்பிக்க... அவள் மதுமதியும் நிஜமாகவே விழிக்கத்தான் செய்தாள்.

அவனிடம்ம என்ன பேசுகிறோம் என உணராமல் தான் அவள் பேசிக் கொண்டிருந்தாள் என்று சொல்ல வேண்டும். அவளது நோக்கம் எல்லாம் இவனுக்கு... இங்கும் நம் வீட்டிற்கு வந்த இடத்தில் தன் நிலையை தன் மனதில் ஓடுவதை அவனுக்குப் புரிய வைத்துவிட வேண்டும் என்ற உணர்வே பெரிதாய் ஓடியது.

அதற்காகவே மனதை அடிக்கடி விரைவுப் படுத்தியோசித்துப் பார்த்தாள். எதுவுமே தெரியாதது போல் கல்லூரி மங்கனாய் இருக்கிறவன். கூடவே வெகு ஜாக்கிரதையானவனும் கூட.

இவனுக்கு தெளிவாய் நம் எண்ணத்தை புரிகிறமாதிரி செய்ய வேண்டும் என்றால் தடாலடியாகத்தான எதாவது செய்ய வேண்டும். அப்படி தடாலடியாய் செய்ய என்ன வழி? என யோசித்தபோது அவளுக்கு முன்பு படித்த சங்க கால குறிஞ்சிப்பாட்டு ஒன்றின் கருத்து தான் ஞாபகத்திற்?கு வந்தது.

அதிகாலை தலைவி எழுந்து தினைப்புனம் அடைந்த பரண் மீது நின்று பறவைகளை ஓட்டுகிறாள். நண்பகல் நேரத்தில் வெம்மை போக்கச் சுனையில் நீராடி, மலைச் சாரலில் ஆடி, மலர் பறித்து சூடி விளையாடுகிறாள். அந்நிலையில் அகன்ற மார்புடன் கூடிய கட்டழகன், தலைவன் கையில் வில்லேந்தி, காலில் வீரக் கழல் ஒலிக்க வேட்டை நாய்கள் சூழ வருகிறான். அப்போது மதம் மிக்க யானை ஒன்று வந்து தினைப் புனத்தை அழிக்கத் தொடங்கியது. அதைக் கண்டு தலைவி நடுநடுங்கி செய்வதறியாது திகைக்க... அங்கு நின்ற தலைவன் வில்லை எடுத்து நாணினில் அம்பேற்றி சுண்டினான். அவனது வேகத்தைக் குறிப்பறிந்து சிட்டாய் பறந்தது மதயானை.



தலைவனின் கம்பீரத்தையும் வீரத்தையும் கண்டு வியந்த தலைவி அப்படியே அவனைக் கண்டு மருகுகிறாள். தீராத காதல் அவன் மேல் கொள்கிறாள். தனது காதலை அவனுக்கு உணர்த்தவேகமாய் அவன் பக்கம் சென்று அவனை நெஞ்சாரத் தழுவுகிறாள்.

தான் அவன் மீது கொண்டிருக்கும் காதலை அவனுக்குப் புரிய வைக்கிறாள். தலைவனும் தலைவியின் பட்டான திருமேனி தன் மேல் ஒட்டிய ஸ்பரிசத்தில் காதல் கிறக்கம் கொள்கிறான். அக்கணமே தலைவியின் கொடியிடையே வளைத்து இழுத்து தனது காதலையும் உணர்த்துகிறான்!

இப்படி குறிஞ்சிப் பாட்டில் படித்த தலைவன் தலைவி காதலை எண்ணிப் பார்த்த மதுமதிக்கு நிஜத்திலும் தனது காதலை கண்ணனுக்கு உணர்த்த அப்படியே செய்யத்தோன்றிற்று.

பெரும் சாமியார் போல் தன் வாழ்நாளையே ஆசிரமவளர்ச்சிக்கு அர்ப்பணித்து விட்டது போல் இருக்கும் இவனுக்கு மென்மையான காதல் உணர்வுகளைப் புரியவைக்க இந்த தடாலடி தேவை எனவும் நினைத்தாள்.

அதனாலே முன்பின் யோசிக்காமல் அவன் பக்கம் போனவள் எங்கோ பார்த்தவாறு எதையோ பேசிக்கொ;டிருந்த அவனை சட்டென தன்புறம் திருப்பி இறுகத் தழுவினாள் அவள்.

அப்படியே அரண்டுதான் போய்விட்டான் கண்ணன்.

எல்லாம் ஒரு நிமிடம்தான்! மறுகணம் அவனது முறுக்கேறிய கையின் ஐந்து விரல்களும் அவளது செவிட்டில் வேகமாய் தடம் பதித்தன.



# 6



அன்று வீட்டிற்கு வந்த மதுமதியால் தாங்க முடியவில்லை. தூங்க முடியவில்லை.

தன் ரூமில் படுத்தவள் கண்கள் மூடாது சிந்தனைக்குப் போகவே பொறுக்க முடியாதவளாய் எழுந்து பால்கனிப் பக்கம் உள்ள காரிடாரில் நடக்க ஆரம்பித்து விட்டாள்.

மனம் முழுவதும் கண்ணனை நினைத்த கொதிப்பு.

கண்ணனைப் பற்றி என்னவெல்லாம் நினைத்திருந்தாள்? எப்படியெல்லாம் கற்பனை செய்திருந்தாள்? எல்லாவற்றையும் தூள் தூளாகச் செய்து விட்டானே?

என்ன சொன்னான்?

நீங்கள் பணக்காரர்கள், கொழுப்பு பிடித்து அலைகிற வேறு ஜாதி. உங்கள் திமிர்த்தனத்தை காட்ட எங்களைப் போன்ற ஏழைகளுடன் விளையாடுவீர்கள். ஆனால்.. என்னிடம் அந்த வேலையெல்லாம் நடக்காது... வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்....

அவன் முகம் இறுக கடுமையாய்ட கண்களை உருட்டிச் சொன்ன விதமும் அந்த உரத்த குரலும்... அப்பா... அவ்ளே ஒரு கணம் நடுங்கி விட்டாள்.

என்ன ஒரு கொடுமை! எந்தக் கண்கள் சிரிக்கிறதே... என்று ரசித்தாளோ அந்தக் கண்களாலே அவளை உஷ்ணமாய் எரிப்பது போல் பார்த்தானே...!

எந்த உதடுகள் இனிமையாய்ப் பேசி மனதை ரம்மியப்படுத்தியதோ... அதே உதடுகள் அவளது கடுமையாய்ப் பேசி அவளது இதயத்தை சுக்காய் உடைத்துக் காயப்படுத்தவும் செய்ததே...!

எனன சொன்னான்?

ஏதோ ஆசிரமத்திற்கு பிறந்த நாளைக் கொண்டாட வந்தீர்கள்.... கொண்டாடிவிட்டுப் போய் விட்டீர்கள். அத்டதோடு முடிந்து விட்டது. சும்மா வந்து உங்கள் பணக்காரத்தனத்தைக் காட்ட தொந்தரவு செய்யாதீர்கள்...

முகத்திலடித்தாற்போல் பேசி விட்டானே!

ஆத்திரமாய் கைகளைக் குத்தியபடி முத்துப் பற்கள் கடிபட நடந்தவள் சட்டென நின்றாள்.

யாரோ சிரிப்பது போல இருந்தது

யாரது?



டக்கென திரும்பிப் பார்க்க... கைகளைக் கட்டியபடி அவளையே பார்த்தவாறு ராஜமாணிக்கம் நின்று கொண்டிருந்தார் புன்னகையுடன்.

டாடி... நீங்களா...?

நானேதான்! நீ இப்படி தூக்கம் வராமல் தவிச்சகிட்டிருப்பேன்னு நினைச்சு பார்க்க வந்தேன். நான் நினைச்ச மாதிரியே நீயும் இருக்க.....

மதுமதி புருவம் உயர வியப்பானாள்.

என்ன டாடி சொல்றீங்க...?

எனக்குத் தெரியும்.... என்றார் ராஜமாணிக்கம் மறுபடியும் பூடகமாய்.

என்ன டாடி... தெரியும்? சொல்லுங்க..

நீ... இப்போ அந்த அன்பு இல்ல கண்ணன் மேல கோபமா இருப்ப.. அவனை நினைச்சு ஆத்திரமா உனக்கு வரும். அப்படித்தானே?

மதுமதி கண்கள் விரிய அதிர்ந்தாள்.

என்ப டாடி சொல்றீங்க? எப்படி உங்களுக்குத் தெரியும்?

எல்லாம் எனக்குத் தெரியும்... என்றார் சிரிப்பு மாறாமல்.

எல்லாம் தெரியும்ன்னா?

காலையில கண்ணனை நீ பேங்கில பார்த்தது... அவன்கிட்ட ஆவலாய் பேசச் சென்றது... அவன் உன்மனம் நோகும்படி முகத்திலடித்தாற்போல் பேசியது... எல்லாம் எனக்குத் தெரியும்...!

அவர் சொல்லச் சொலல பலமாய் அதிர்ந்தாள் மதுமதி.

எப்படி... எப்படி... டாடி... எல்லாத்தையும் கரெக்ட்டா சொல்றீங்க?

எல்லா விஷயத்தையும் கண்ணனே என்கிட்ட போன் பண்ணி சொன்னார்.

மறுபடியும் அதிர்ச்சி.

என்ன கண்ணனே போன் பண்ணினாரா?

ராஜமாணிக்கம் சிரிப்பை நிறுத்திவிட்டு சீரியஸான முகத்துடன் அவன் பக்கம் வந்தார்.

மது, சொன்னா ஆச்சரியமா இருக்கும். கண்ணன் உன்கிட்ட அப்படி நடந்துக்கிட்டது வேணும்னுதான்...

என்ன டாடி சொல்றீங்க?

சொல்றேன். அதுக்கு முன்னால கண்ணனைப் பத்தி ஒரு விஷயத்தைத் தெரிஞ்சுக்கணும். கண்ணனுக்கு தன்னோட ஆசிரமத்தை நடத்துறது பற்றி, அதோட பிஞ்சுகளை நல்லபடியா கவனிச்சு வைச்சுக்கிறது பற்றிதான் எப்பவும் சிந்தனை இருக்கும். வேறு எந்த சிந்தனையும் பிரச்சினையும் அவர் மனசில வர விட மாட்டாரு. அதே போல தன்னால மத்தவங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வந்துவிடக் கூடாதுங்கிறதுலயும் உறுதியா இருப்பாரு... சொன்ன ராஜமாணிக்கம் நிறுத்தியபடி அர்த்தமான பார்வை பார்த்தவர், இப்டப புரியுதா? என்றார்.

புரியுது... புரியுது... டாடி....

நிஜமாகவே புரிந்தவளாய் காது மடல்கள் அதிர தலையை ஆட்டினாள் மதுமதி.

என்ன புரியுது?

பேச... வந்த என்கிட்ட வழக்கம்போல சிரிச்சுப் பேசினா... மேலும் மேலும் பேசற பழக்கம்... அடிக்கடி பார்க்கிற வழக்கம் ஏற்பட்டு அதனால வீணான பிரச்சினைகள் எதுவும் வந்திரக்கூடாதுன்னு ஒதுங்கிப் போக நினைக்கிறாரு....

அதேதான்! கரெக்ட்டா சொல்லிட்ட...

கைகளைத் தட்டினார் ராஜமாணிக்கம்.

உங்கிட்ட இப்படியேவா வெளிப்படையாச் சொன்னாரு?

அப்படி இல்ல... மது.. எல்லாத்தையும் சொல்லி உங்க டாட்டர்கிட்ட நான் அப்படி நடந்துக்கிட்டதுக்கு சில காரணங்கள் இருக்கு. அது என்னன்னு யோசிச்சுப் பார்த்தா உங்களுக்கே புரியும். எல்லாம் நன்மைக்கேங்கிறதுக்காகத்தான் நானும் அப்படி கடுமையா நடந்துகிட்டேன். அதுக்காக என்னை மன்னிச்சிருங்கன்னு மன்னிப்பு கூட கேட்டார்.



ஓஹோ... கதை அப்படிப் போகிறதா? என வலது கையால் இடது உள்ளங்கையில் குத்திச் சிரித்தாள் மதுமதி.

மகளிடம் அப்படிப் பேசிவிட்டு அதற்காக தந்தையிடம் மன்னிப்பா?

என்ன ஒரு விநோதம்!

இந்தக் கண்ணன் ரொம்பவும் வித்தியாசமானவனாய்த்தான் தெரிகிறான்!

ஒரு கணம் தனது கல்லூரி அனுபவங்களை நினைத்துப் பார்த்தாள்... மதுமதி.

கல்லூரியில் அழகுப் பதுமையான அவள் லேசாக சிரித்தாலே எத்தனை பேர் வந்து வழிவார்கள்.

லேசாக அவளிடம் பேசியதை சாக்காய் வைத்துக் கொண்டு தினம் தினம் பேச அலைந்த ஆண்கள் கூட்டம் தான் எத்தனை!

அவள் அழகி மட்டுமல்ல பெரும் பணக்காரியும்டா...! பெரியவர்கள் சொல்வார்களே சரியான புளியங்கொம்பு அது இவள்தான்! பிடித்தால் இவளைப் போல ஒரு ஒருத்தியைப் பிடிக்க வேண்டும்.... என அவளிடம் மோதிய மன்மதக் கொம்புகள் தான் எத்தனை?

யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் முகம் வெட்டி விருட்டென சென்று விடுவாளே!

மீறி நெருங்குவது போல் பேச்சை ஆரம்பித்தாலும், சே..! சே... ! இதெல்லாம் எனக்குப் பிடிக்காத சமாச்சாரம்... இது போன்ற எண்ணங்களை விட்டு விட்டு... படிப்பில் கவனம் செலுத்துங்கள்...! எனக் கறாராய் எத்தனை பேரிடம் சொல்லியிருக்கிறாள். ஆனால் இன்று இப்படி நடந்து விட்டதே! திகைப்பானாள் மதுமதி.



# 7



பட்டாலும் புரியாது நீயால் சுட்டாலும் தெரியாது என பழமொழி சொல்வது போலத்தான் நாளுக்கு நாள் மதுமதியின் நிலைமையும் ஆகிக் கொண்டிருந்தது.

யாரரை மறக்க வேண்டும் என நினைத்தாளோ அவன்தான் அடிக்கடி நினைவுக்கு வந்த கொண்டிருந்தான். அது அந்த நினைவும் முன்பு போல் பரவசத்தை ஏற்படுத்தாமல் பெரும் எரிச்சலையே கிளப்பியது.

ஏன்தான். இந்த கண்ணனைப் பார்த்தோம். பேசினோம் என்றுதான் நினைத்தாள். இவனை மட்டும் பார்க்காமல் இருந்தால் இப்படித் தவிப்பு கொள்ள வேண்டிய அவசியம் இருக்காதே!

மறுநாள்...

கல்லூரி பஸ் ஸ்டாப்பில் பஸ்ஸுக்காக காத்திருந்தபோது... முன்பு பார்த்தது போல் எதிர்ப்புற வங்கி ஒன்றுக்கு பைக்கை நிறுத்தி விட்டுச் செல்லும் கண்ணனைப் பார்த்தாள்.

அவனும் எதிர்ப்புறமாய் நிற்கும் அவளை பார்க்கத்தான் செய்திருப்பான். ஆனாலும் அவளைக் கவனியாதது போன்ற பாவனையிலே வங்கி உள்ளே சென்று விட்டான்.

அவ்வளவுதான்! மதுமதியால் தவிப்பை அடக்க முடியவில்லை. அவனிடம் போய் ஏதாவது பேச வேண்டும் என்கிற பரபரப்பு தொற்றிக் கொண்டது.

வேறு எது பற்றியும் சிந்தனை கொள்ளாதவளாய் தோழிகளிடம் சொல்லிவிட்டு எதிர்ப்புற வங்கியை நோக்கி ஓடத்தான் செய்தாள் அவள்.

அதே படபடப்புடன் வங்கியினுள் நுழைந்து கண்ணனைத் தேடியபோது வங்கியின் வலது ஓரமாய் நின்று ஏதோ ஒரு பாரத்தை அக்கறையாய் அவன் நிரமப்பிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது.



பக்கத்தில் போய் சட்டென அவன் முன் நின்றாள் அவள்.

முன்பு போல் அவளைப் பார்த்ததும் வரும் உற்சாகமான சந்தோஷ சிரிப்பை அவன் உதடுகள் சிரிக்க மறுத்து இறுக்கமானது.

ஒரு கணம் தான் கொண்டிருக்கும் காரியத்திலேயே கவனமாயிருந்த அவனை வியப்புடனே பார்த்தாள். நகரின் பெரிய தொழில் அதிபர் அவளது தந்தை. அவரது ஒரே செல்வ மகள் அவள். இப்படி அழகும் கோடிக்கணக்கான சொத்துக்கு வாரிசாக இருக்கும் அவளை ஒருவன் வெகு சாதாரணமாக வேண்டாம் என உதாசினப் படுத்துகிறானே!

உலகம் புரியாதவனா.. அல்லது அற்பமான சொகுசுகளுக்கும் சபலங்களுக்கும் அடிமைப்படாத கம்பீரமா?

நிச்சயமாக கம்பீரம்தான்! தெளிவான சிந்தனைதான்! தன் வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும் என தீர்மானத்துடன் இருக்கிறானே! இவனைப் போன்ற ஒருவன் கணவனாய் அமைய ஒரு பெண் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அந்தக் கொடுப்பினை நமக்கு இல்லையோ? என அவள் திகைப்பாய் சிந்திக்கும்போது நிமிர்ந்தான் அவன்.

அவள் தன் எதிரே நிற்பதைப் பார்த்து கண்கள் விரிய ஆச்சரியப்பட்டவன் இறுக்கம் தளர்ந்த உதடுகளால் சிரித்தான்.

நீங்களா... எப்படி இருக்கிறீர்கள்? என்றான் அக்கறையாய் குசலம் விசாரிப்பது போல்.

அவளுக்கு என்ன தோன்றியதோ வேண்டுமென்றே அப்படிச் சொன்னாள்.

அடி... இன்னமும் வலிக்கிறது... என்றாள்.

அவன் முகம் மாறியது. சட்டென குனிந்து அவள் முகத்தை நன்கு உற்றுப் பார்த்தான்.

இன்னமும் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் அவ்வளவு வேகமாக அடித்து விட்டேனா? மறந்து விடுங்கள்! அதெல்லாம் அன்றோடு முடிந்த விஷயம்!

அவளை ஆறுதல் படுத்துவது போல் கைகளைத் தட்டிச் சொன்னான்.

அவள் விளக்கினாள்.

நான் சொன்ன அடி அதுவல்ல. என் மனதில் நீங்கள் கொடுத்தது. காதல், கல்யாணம் போன்ற பேச்சுகளுக்கெல்லாம் உங்கள் வாழ்க்கையில் இடமில்லை என்று நீங்கள் சொன்னது...

அவள் நிறுத்திட்ட அவன் மெல்ல தலையசைத்தான். ஓ... புரிகிறது.. என்றான்.

அவன் அப்படியே மௌனமாகி விட அவளுக்கு மறுபடியும் நப்பாசைதான்.

அதை மறுபரிசீலனை செய்யும் எண்ணம் எதுவும் இருக்கிறதா? என்றாள்.

இம்முறை திரும்பி நேருக்கு நேராய் அவள் கண்களைப் பார்த்தான்.

மது, என் கண்களைப் பாருங்கள். அதில் எதாவது சலனம், தடுமாற்றம் தெரிகிறதா? இல்லையே... அது போல்தான் என் முடிவும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. புரிந்து கொள்ளுங்கள். நான் வளர்ந்த சூழ்நிலைகள்.. நான் ஆற்ற வேண்டிய கடமைகள் அப்படி...

அவள் பிரமை பிடித்த கற்சிலை போலத்தான் மறுபடியும் ஆகிவிட்டாள். அவன் மறுபடியும் அவள் கைகளை உரிமையுடன் தட்டினான். வீணாக மனதை போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். காலப்போக்கில் எல்லாம் சரியாகி விடும். நான் வருகிறேன்! என்றபடி அங்கிருந்து அகன்றான். விறுவிறுவென அவள் பார்வையில் இருந்தும் மறைந்து விட்டான்.

அவள் எவ்வளவு நேரம்தான் அப்படி எதுவும் தோன்றாதவளாய் பித்துப் பிடித்தாற்போல் நிற்க முடியும்? கொஞ்ச நிமிடங்களில் உணர்வுக்கு வந்தவள் மெல்ல தளர்வான நடை போட்டாள். வங்கியை விட்டு வெளிவந்து பஸ் ஸ்டாப்பை அடைந்தாள்.



வீட்டில் வழக்கம் போ; தாயிடம் சென்டி தந்தையிடம சிரித்து விளையாடி கலகலப்பாய் இருப்பதைப் போல் நடித்தாள். நடிக்க முயற்சி செய்தாள்.

ஆனால் வழக்கத்திற்கு மாறாக தந்தை ராஜமாணிக்கம் ஒருவித இறுக்கத்துடன் சோகம் பொங்க இருப்பதைக் கவனித்துத் திகைத்தாள்.

இரவில் தனக்கு, குட்நைட் சொல்லி விட்டு அவர் தூங்காமல் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடப்பது தெரிய... அதற்கு மேலும் பொறுக்க முடியாதவளாய் அவளே தந்தையைத் தேடி போய் கேட்டாள்.

அதெல்லாம் ஒன்றுமில்லை... என்றார் ராஜமாணிக்கம் மறுக்கும் விதமாய்

இல்லை டாடி... உங்கள் முகமே எனக்குச் சொல்கிறது. விஷயத்தைச் சொல்லுங்கள்.. என்றாள் பிடிவாத குரலாய்.

ராஜமாணிக்கமம் அதற்கு மேல் மறைக்க விரும்பவில்லை.

ம்ம்.. சொல்கிறேன்.. என்றபடி ஆரம்பித்தவர்.

மது.. என்னுடைய தொழிலில் மிகப் பெரிய நஷ்டம் ஒன்று ஏற்பட்டு விட்டது. அதனால் பல கோடிகளை இழக்கும் அபாயமம் வந்து விட்டது...

என்ன சொல்கிறீர்கள் டாடி... என்னால் நம்பவே முடியவில்லை... நம் தொழிலிலா?

அவள் படபடவென கேட்டதற்கு சோகமாய் தலையசைத்தார் ராஜமாணிக்கம்.

ஆமாம் மது. என்னாலும் தான் நம்ப முடியவில்லை. நல்ல லாபத்தில் நன்றாகப் போய்க் கொண்டிருந்த நம் தொழில் திடீரென பெரும் சரிவை சந்தித்து விட்டது. அதற்குக் காரணம் திடீரென நாம் எடுத்த வெளிநாட்டுக் கம்பெனியின் ஏற்றுமதி ஆர்டர் ஒன்று. நூறு கோடிக்கும் அதிகமான அந்த ஆர்டரால்தான் இப்போது பெரும் சோதனையும் வந்திருக்கிறது.....

நூறு கோடிக்கும் அதிகமாகவா?

ம்ம்... சரியாகச் சொன்னால் நூற்றைம்பது கோடி. நம் மில்களில் உருவான பல வகையான நூல்களை வெளிநாட்டுக் கம்பெனி ஒன்றுக்கு விற்பதற்கான ஒப்பந்தம்... ஆர்டர் அது. அதன்படி கப்பலில் நூல் சரக்கை ஏற்றி போன மாதமே வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டோம் ஆனால்.

ஆனால்... என்னாயிற்று சொல்லுங்கள் டாடி?

நாம் அனுப்பி வைத்த கப்பலில் தண்ணீர் கசிவு ஸ்ட்டோரோஜ் பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கப்பல் ஊழியர்கள் யாரும் கவனிக்கவும் இல்லை. அப்படி கசிவால் ஏற்பட்ட தண்ணீர் நமது விலை மதிப்புள்ள நூல்களை பதம் பார்த்து விட்டது. நமது நூற்றைம்பது கோடி நூல்களின் பண்டல்கள் முழுவதும் தண்ணீரில் நனைந்து தங்களது முறுக்கேறிய தன்மையை இழந்து விட்டன. நம்மிடம் ஆர்டர் செய்த வெளிநாட்டுக் கம்பெனி நூல்கள் சரியில்லை என வாங்க மறுத்து நிராகரித்து விட்டது. ஆர்டரை கான்சல் செய்து விட்டது....

ஆனால்.. நாம் கப்பல் நிர்வாகத்திடம் புகார் கூறலாமே? மேற்படி சேதாரம் ஆனதற்கு நஷ்ட ஈடு கேட்கலாமே?

மதுமதி படபடத்துக் கேட்க சோகப் புன்னகையுடன் மறுத்தார் ராஜமாணிக்கம்.

அதுவும் முடியாது மது... சரக்கை கப்பலில் ஏற்ற வேண்டும் என்ற அவசரத்தில் முறைப்படி நாம் சரக்கை இன்ஷ்யூர் செய்யவில்லை. கப்பல் நிர்வாகத்துடன் சரக்கை பாதுகாப்பாய் கொடுக்கும் ஒப்பந்தத்தை செய்து கொள்ளவில்லை. அதனால் கப்பல் நிர்வாகத்திடிடம் நாம் இழப்பீட்டுக்கு நஷ்ட ஈடு கேட்டு கோரவும் வழியில்லை.....

அப்படியானால்... இதனால் நிறை பண இழப்பு நமக்கு ஏற்பட்டு விடுமா?

ராஜமாணிக்கத்தின் முகம் மறுபடி இறுகியது.

நிறைய பண இழப்புதான் மது..... அதுவும் நம் குடியே மூழ்கும் அளவுக்கு...



என்ன சொல்கிறீர்கள் டாடி? என்றாள் மதுமதி அதிர்ச்சியோடு.

ஆமாம்... மது சொல்லக் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ஆனால் உண்மை அதுதான் நூற்றைம்பது கோடி நஷ்டம். நம்மால் தாங்க முடியாத கடன் தொகை. நம் சொத்து பத்தையெல்லாம் விற்றுக் கொடுத்து விட்டு தெருவில் வந்து நிற்க வேண்டி நிலை ஏற்பட்டுவிடும்..

இதற்கு வேறு வழியே இல்லையா டாடி?

மதுமதி குரல் நடுங்க கேட்க ராஜமாணிக்கம் முன்னால் வந்து கைகளைக் கட்டியவர் அவளை நேராய்ப் பார்த்தார்.

ஒரே ஒரு வழி இருக்கிறது. அதன்படி நீ உடனடியாக திருமணம் செய்து கொள்ள வேண்டும்...! என்றார் அமைதியாக.



# 8



நிஜமாகவே தந்தை சொன்னதைக் கேட்டு ஷாக்கடித்த உணர்வுதான் மதுமதிக்கு ஏற்பட்டது.

என்ன... நான் திருமணம் செய்ய வேண்டுமா? என்றாள் பலத்த அதிர்ச்சியுடன்.

அதற்கும் வறண்ட புன்னகையுடன் தலையசைத்தடதார் ராஜமாணிக்கம்.

நான் கல்யாணம் செய்து கொள்வதற்கும்... இந்த பெரும் நஷ்டத்தில் இருந்து நாம் தப்பிப்பதற்கும் என்ன வழி டாடி?

வழி இருக்கிறது... நண்பனின் உதவி...

நண்பனின் உதவியா?

நீளப் பெருமூக்கடன் பேச ஆரம்பித்தார் ராஜமாணிக்கம்.

மது, என்னுடைய நீண்ட கால தொழில் நண்பர் வேதநாயகம். அவரும் என்னைப் போல பல மில்களின் அதிபர். கோடீஸ்வரர் அவர் இந்த நூற்றைம்பது கோடி கடனை தன் சொந்தப் பணம் மூலமாகவும் அவருக்குத் தெரிந்த வங்கிகளின் மூலம் லோன் ஏற்பாடு செய்து அடைத்து விடலாம் எனக் கூறுகிறார். அப்படி அவர் நடக்க வைக்க.... எனக்கு உதவ அவர் ஒரு நிபந்தனையும் போடுகிறார்...

நிபந்தனையா?

ம்ம்... அவரது ஒரே மகன் மோகனை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம். அதுதான் அவர் போடும் கண்டிஷன்....

என்ன... என்ன... நான் திருமணம்... செய்து கொள்ள வேண்டுமா?

மதுமதி அதிர்ச்சியோடு அலறத்தான் செய்தாள்.

ஆ...மா..ம்...! என்றார் ராஜமாணிக்கம் அதே இறுக்கத்தோடு.

என்னப்பா... இது அநியாயம்! உங்களுக்கு உதவுவதற்கும் நான் கல்யாணம் செய்து கொள்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

இதைத்தான் நானும் கேட்டேன். அதற் கு அவர் என்ன பதில் சொல்கிறார் தெரியுமா?

என்ன சொல்கிறார்?

அவருக்கு லஷ்மிகரமாய் அழகாய் உள்ள உன்னை மிகவும் பிடித்திருக்கிறதாம். நீயே அவர் வீட்டு மருமகளாய் வர வேண்டும் என்பது அவரது நீண்ட நாள் ஆசையாம்.. அதனால நாம் இதற்கு ஒத்துக் கொண்டால் பதிலுக்கு நமக்கு உதவுவதாய் உறுதி சொல்கிறார்...

என்னப்பா... இது... ஒரு நண்பர் செய்வதுபோல இல்லையே...! சூழ்நிலையைப் பயன்படுத்தி பேரம் பேசுவது போல் அல்லவா இருக்கிறது?

பலமாய் தலையசைத்தார் ராஜமாணிக்கம்.

உண்மைதான் மது! நம் சூழ்நிலை அறிந்து அவர் சரியாக காய் நகர்த்திப் பார்கிறார். அதை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும்... நம் விருப்பம். நம் இஷ்டம்....

ஆனால் கல்யாணப் பேச்சுக்கு நாம் மறுத்தால் அவர் உதவப் போவது இல்லைதானே?

கண்டிப்பாக உதவமாட்டார்! நமக்கு ஏன் வம்பு என ஒதுங்கிக் கொள்வார்..! உதட்டை பிதுக்கியபடி தந்தை சொன்னபோது மதுமதி திகைக்கத்தான் செய்தாள.

என்ன இது சோதனை? இப்போதுதான் கண்ணன் விஷயத்தில் அதிர்ச்சியாகி.. ஸ்தம்பித்து நின்றாள்.... அதை விட பெரிய அதிர்ச்சியைள அல்லவா தந்தை கொடுக்கிறார் இப்போது என்ன செய்வது?

வேறு வழி எதுவும் இருக்கிறதா டாடி? என்றாள் திரும்பவும் ஒரு நப்பாசையுடன்

பார்த்து விட்டேன் மது. ஆடிட்டர்கள் தெரிந்த தொழிலதிபர்கள் என நிறைய பேரிடம் பேசிப் பார்த்துவிட்டேன். வேறு யாராலும் வழி சொல்ல முடியவில்லை. யாரும் உதவ முன்வரவில்லை.

ராஜமாணிக்கம் சொல்லியபடி கைகளை விரித்தார்.

அதனால் என்ன... மது? பணம்.... இந்த பங்களா.. கார... சொகுசு வாழ்க்கை போய்விடும். நன்றாக போகட்டுமே! ஒரு குடிசை வீட்டில்



உட்கார்ந்தாவது உழைத்து மறுபடியும் சம்பாதித்துக் காட்டுகிறேன்... என்னால் முடியும்... மது....

விரக்தியில் பேசுவது போல் பேசினார் தந்தை. அவளை மேலும் படுக்கச் செல்லுமாறு வற்புறுத்ததன் ரூமிற்கு சோகமான நடையுடன் திரும்பினாள் மது.

குழப்பம் நீங்க வந்த கொஞ்ச நஞ்ச தூக்கமும் இந்தப புதுக் குழப்பத்தால் சுத்தமாய் பறந்து போனது.

படுக்கையில் உட்கார்ந்து கொட்டக் கொட்ட விழித்தபடி யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.

தந்தை... சொல்வது போல் குடும்பம் இக்கட்டான நிலையில் இருக்கிறது. இந்த நிலையில் உதவ யாரும் வருவதே கஷ்டம்... ஒரே ஒரு நண்பர் உதவ முன்வருகிறார்... அதுவும் நிபந்தனையோடு...!

அவர் கேட்பது சரிதானே? எந்தவிதப் பலனும் இல்லாமல் இந்த கலியுகத்தில் யார் உதவி செய்ய வரவார்கள்?

அதற்காக... எங்களைக் காப்பாற்றுங்கள்... என அவர் மகனுக்கு கழுத்தை நீட்டி விடுவதா?

ஆனால் தந்தை சொல்வதைப் பார்த்தால்... வேறு வழி இல்லை போல் தெரிகிறதே...!

இப்போது என்ன செய்து...?

முடிவு எடுத்தாக வேண்டும். அதுவும் உடனடியாக எடுத்தாக வேண்டும்.

தந்தை அவளை இந்தச் சூழ்நிலையில் வற்புறுத்தக் கூடாது... சிரமப்படுத்தக்கூடாது என்பதற்காக நாசூக்காய் விஷயத்தைச் சொல்லிவிட்டு நிறுத்தி விட்டார்.

அதற்டகாக... அந்த நண்பர் தொழிலதிபர் வேத நாயகத்தின் .... மகன்.... அவர் பெயர.... கூட... ம்ம்... மோகன்... அவனை மணந்து கொள்வதா?

வேறு வழி...?

அப்படியானால் கண்ணனை நினைத்து... பித்துப் பிடித்தாற் போல் அவனையே சுற்றி வந்தது?

அட.... உனக்கு வெட்கமாய் இல்லை மது? இன்னமும் கண்ணனையே நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அவன் செருப்பால் அடிப்பது போல் உன் செவிட்டில் அறைந்தே இது போன்ற கற்பனைகளை இனியுமட் வளர்க்காதே... என உணர்த்தி விட்டானே! இன்னமுமா அவனையே நினைத்துக் கொண்டு ரோமியோ ஜூலியட்டாய் மனதில் உருகப் போகிறாய்?

இன்னொரு குரல் ஒய்யாரமா; மனதினுள் எழுந்து பிலுபிலுவென அவளைப் பிடித்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தது.

ஒரு கணம் என்ன செய்ய... எப்படி முடிவெடுக்க? என்பது தெரியாமல் தடுமாறத்டதான் செய்தான் மதுமதி.

ஆனால் மற்ற எல்லாவற்றையும் விட ஒரு விஷயம் தெளிவாய் புரிந்தது.

எத... எப்படியானாலும் தந்தை பெரிய இக்கட்டில் இருக்கிறார்.

அவருக்கு... அவள் ஒருத்தியால்தான் உதவி செய்து இக்கட்டில் இருந்து மீட்க முடியும்....

மேலும் கண்ணன் தெளிவாய் சொல்லி விட்டான். இனியும் கிறுக்குப் பிடித்தாற்போல் அவனையே நினைத்துக் கொண்டிருப்பதற்குப் பதில் அவனை மறந்து... தந்தையை .காப்பாற்றுவதற்காக அந்த வேதநாயகத்தின் மகன் மோகனை கல்யாணம் செய்துகொள்ளலாம்.

இது... அவள் நினைத்தால் நடக்கக் கூடியதுதான்!

தந்தைக்காக... மோகனை திருமணம் செய்து கொள்ளலாம்தான்!

ஆனால்.. கண்ணனை... அவளால் மறந்துவிட முடியுமா? அவனது நினைவுகளில் இருந்து ஒரேடியாய் அழித்துவிட முடியுமா?



# 9



மதுமதிக்கே ஆச்சரியம்! தான் எப்படி அந்த முடிவை தைரியமாய் எடுத்தோம் துணிச்சலா; தந்தையிடம் போய் சொன்னோம் என்று!

கேட்ட ராஜமாணிக்கமே ஒரு கணம் திகைத்துப் போய் விட்டார்.

நிஜமாகவா சொல்கிறாய் மது? என்றால் கொஞ்சமம் நம்ப முடியாமல்.

ஆமாம். நான் உங்கள் நண்பரின் மகன் மோகனை மணக்க மனப்பூர்வமாய் சம்மதிக்கிறேன்... என்றாள் திடமான குரலில்..

அவள் சென்றதும் ராஜமாணிக்கத்தின் முகத்தில் பூரணமான புன்னகையொன்று படர்ந்தது.

மறுநிமிடமே தன் செல்போனை எடுத்து வேதநாயகத்தின் நம்பருக்கு டயல் செய்ய ஆரம்பித்தார் அவர்.



மதுமதி சொன்னதுமே விஷயங்கள் வேகமாக நடக்க ஆரம்பித்து விட்டன. அடுத்த இரண்டு நாளில் பெண்ணும் மாப்பிள்ளையும் நேருக்கு நேர் பார்க்கும் படலம் அதற்கு அடுத்த நாள் கல்யாண நிச்சயதார்த்தம்.

மறுமாதம் ஒரு நல்ல முகூர்த்த நாளில் கல்யா ஏற்பாடுகளில் தீவிரமாய் எல்லோரும் இருந்தார்களே தவிர யாரும் மதுமதியின் கல்லூரி படிப்பைப் பற்றி கொஞ்சமம் கவலைப்பட்டதாய் தெரியவில்லை. சொலவப் பானால் அவளை அப்படி முக்கியமான கடைசி வருட டிகிரி படிப்பை படித்து வருகிறாள் என்பதை ஒரு பொருட்டாய் கூட எடுத்துக் கொள்ளவில்லை.

இனி படிக்காவிட்டால் தான் என்ன? என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் போல... என்று எண்ணிய மதுமதி தன் ஆசையை தந்தையிடம் சென்று வெளிப்படுத்தினாள்.

ஆனால் ராஜமாணிக்கம் அது பற்றி முன்பே சிந்தித்திருந்தார் என்றே சொல்ல வேண்டும். நீ ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை மது ❑ கல்யாணத்ற்கு பிறகும் நீ தாராளமாக படிப்பைத் தொடரலாம். அதற்காக மாப்பிள்ளையிடமே நேரிடையாய் பேசி அவரின் முழுச்சம்மதத்தையும் வாங்கி விட்டேன். அவரும் நீ படிப்பை முழுமையாய் முடிக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறார்!

தந்தை சொன்னதும் தான், அப்பாடா தந்தையாவது நம்மைப் புரிந்து வைத்திருக்கிறாரே...! என பெரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அவள்.

மறுநாள் நடந்த பெண் மாப்பிள்ளை பார்க்கும் நிகழ்ச்சியில்தான் அவள் முதன் முதலாய் தொழிலதிபர் வேதநாயகத்தின் மகனும் மாப்பிள்ளையுமான மோகனைப் பார்த்தாள்.

மோகன் சற்றுக் கறுப்பு என்றாலும் களையான முகத்துடன் கறுகறுப்பாய்த்தான் தெரிந்தான். இடுங்கிய கண்கள் அவன் புருவம் உயர்த்திய போதெல்லாம் விரிந்தது. அவளை ஆசையாய் விழுங்குவது போலப் பார்த்தது.

மதுமதி அவனை உற்றுப் பார்த்தபோது அவளையறியாமல் கண்ணனின் முகமம் அவள் ஞாபகத்திற்கு வந்தது. கண்ணனின் அந்தக் கம்பீ

ஆளுமையும், வசீகர முகமும், அந்த சிரிக்கும் கண்களும் நிச்சயமாக இந்த மோகனிடம் இல்லைதான்!

அப்படி நினைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போதே, சே! என்ன இது நினைப்பு! என அதை விரட்டினாள். ஆனாலும் மோகனை அங்கு அப்படிப் பார்க்கும்போதெல்லாம்.. இங்கு இப்படி கண்ணன் வீற்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றே புத்தி போனது.

ம்ஹூம்! இனியும் கண்ணனை நினைப்பது ஆபத்தானது. தேவையில்லாதது என அந்த நினைவுகளை விரட்டினாள்.

மோகனின் தந்தை தொழிலதிபர் வேதநாயகம்தான் அவள் பக்கம் வந்து, என்ன மோகனைப் படித்திருக்கிறதா? உனக்கு சம்மதம் தானே? என்று கேட்டார்.

புன்னகையுடன் தலையாட்டத்தான் செய்தாள் அவள். கூடவே, தன் தந்தைக்கு இக்கட்டில் உதவி செய்வதற்கு பிளாக்மெயில் செய்வது போல் தன்னை பெண் கேட்டு விட்டு, தன் விருப்பத்தை அறிய விரும்புவது போல் கரிசனமம் காட்டுகிறாரே... என நினைத்தாள். அதைவிட மாப்பிள்ளையான மோகன் அவளை விழுங்குவது போல் வைத்த கண் மாறாமல் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது சங்கோஜமாய் எரிச்சலாயும் இருந்தது.

தாய், செண்பகமும் அவள் காதுகளில் குனிந்து, மதுக்குட்டி, மாப்பிள்ளை வாட்ட சாட்டமாய்த்தான் இருக்கிறார். எனக்குப் பிடித்திருக்கிறது...? என தன் சம்மதத்தைச் சொன்னாள்.

மதுமதிடியின் கண்கள் தந்தையை தேடின. அவர் வேதநாயகத்தை கவனிப்பதிலும் அவருடன் பேச்சுக் கொடுப்பதிலேயே மும்முரமாய் அலைந்து கொண்டிருந்தார். மதுமதிக்குப் புரிந்தது.

அப்பா சொல்வதைப் போல் தொழிலில் நூற்று ஐம்பது கோடி நஷ்டம் என்பது பெரிய தொகை. அந்தத் தொகைக்காக அவர்கள் சொத்து பத்து எல்லாம் இழந்து தெருவிற்கே வந்துவிட வேண்டிய சூழ்நிலை!

இந்நிலையில் ஆபத்பாந்தவனாய் தந்தைக்கு கை நீட்டுகிறார் வேதநாயகம். பெண் கொடுங்கள். சம்பந்தி ஆகிவிடுவோம். நான்



காப்பாற்றுகிறேன்! என்கிறார். பிளாக் மெயில் போல் சொன்னாலும் அவர் சொல்வது நல்ல விஷயம்தானே?

அவர் நினைத்தால் அவரது கோடீஸ்வர மகனுக்கு எத்தனையோ பேர் பெண் கொடுக்க நம்மைத் தேடி வருகிறார். நம் சம்பந்தம் பிடித்திருக்கிறது என்கிறார்.

இது... நல்லது.. பாராட்டத் தக்கதுதானே! என நினைத்தவள் தன் பயம் எல்லாம் நீங்கியது போ; நிமிர்ந்து கொண்டாள்.

தன்னையே விழி விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்த மோகனை சிநேகமாய்ப் பார்த்தாள். முதன் முறையாய் அவனைப் பார்த்து இதழ் விரியும் சிரிப்பு ஒன்றையும் உதிர விட்டாள் அவள்.

❖❖❖❖❖❖❖❖

உடன்ட அன்று மாப்பிள்ளை அறிமுக விழா கல்யாணத்திற்கான நிச்சய உறுதி செய்வது போலவும் பேச்சு அமைந்தது.

ஆனால் இரண்டு நாள் கழித்து திடீரென மோகன் புதுகாருடன் வந்து தனியே அவளிடம் பேச வேண்டும் என்று நின்றபோது அவளுக்க என்ன சொல்வதென்று தெரியவில்லை. எவ்வித உணர்ச்சியுமில்லாமல் தந்தையின் முகத்தைத்தான் பார்த்தாள் மதுமதி.

அவரோ சூழ்நிலையைப் புரிந்து கொண்டு பெரும் உற்சாகம் கொண்டார்.

ம்ம்... பேசுவதென்ன? ஒரு ரவுண்ட் வெளியில் போய் வாருங்கள். பக்கத்தில் பீச் சாலையை ஒட்டி புதியதாய் ரெஸ்ட்டாரண்ட் ஒன்று திறந்திருக்கிறார்கள். அங்கு போய் வாருங்கள்! என்றார்.

ராஜமாணிக்கம் சொன்னதற்கு பவ்யமாய் கிளிப்பிள்ளை போல தலையாட்டினான் மோகன்.

மதுமதிக்கு உடன்பாடில்லை என்றாலும் வேறு வழியில்லாதவளாய் கிளம்பினாள். கண்ணைக் கவரும் பச்சை நிற சுரிதாருடன் அவள் தோன்றியபோது மோகன் வாய் பிளக்கும் அதிசயத்துடன் தான் அவளைப் பார்த்தான்.

வாவ்...! வாட்... எ.... சர்ப்பரைஸ்...! எல்லோரும் சொன்னது சரிதான்...! என்றான்.

என்ன...? என்பது போல் மதுமதி பார்க்க, நீங்கள் நிஜமாகவே ஒரு ஏஞ்சல் போல் தேவதை போன்றான அழகுதான்...! என விளக்கம் கொடுத்து புகழாரம் சூட்டினான்.

ஒரு மெல்லிய புன்னகையை மட்டும் பதிலாக்கிவிட்டு அவன் திறந்து விட்ட கதவு வழியாய் காரினுள் ஏறினாள்.

புது மாடல் டோயட்டா கோரல்லா. நேற்று தான் ஷோ ரூமிலிருந்து இறக்கினேன். கார் எப்படி இருக்கிறது? என்றபோது விழிகளை பெரிதாக்கி காரை ஒரு பார்வை பார்த்துவிட்டு மறுபடியும் தலையாட்டினாள்.

எல்லாம் தலையாட்டல்தானா? வாய் திறந்து பேசுவது கிடையாதா மது? எனவும், அவன் கேள்வியையும் தன்னை சட்டென ஒருமையில் அழைக்க ஆரம்பித்து விட்டதையும் உணர்ந்து திடுக்கிடவே செய்தாள்.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... என்றாள் அவசரமாக.

அப்பாடா! முத்து உதிர்ந்தது...! என்றான் மோகன் பெரும் சிரிப்புடன்.

அவளும் உடன் சேர்ந்தே சிரித்தாள்.

மோகனின் அளவு கடந்த ஆவலும், உற்சாகமும் அவளுக்கு அதிசயமாகவே பட்டது.

எதற்கு... இந்த பூரிப்பு? எதனால் இந்த உற்சாகம்?

அதற்கு விடையாய் அடுத்து அவன் சொன்ன வார்த்தைகளே அமைந்தது.

மது. உன்னை ஒரு நாள் காலேஜ் பெஸ்டிவல் விழா ஒன்றில் முதன் முதலாய் பார்த்தேன். பார்த்ததும் உடனே உன்னைப் பிடித்துப் போய் விட்டது. நீ தான் என் மனைவி! என அப்போதே முடிவு செய்து விட்டேன். உன்னைப் பற்றி விசாரித்தபோது... என் தந்தையின் நெருங்கிய நண்பரின் மகள்தான் என தெரிய வர... மிட்டாய்க்கு ஆசைப்படும் குழந்தை போல் அப்பாவை நச்சரிக்க ஆரம்பித்து விட்டேன். அப்பாவும் என் ஆசையை தீவிரமாய் உடனே நிறைவேற்றி விட்டார்....

அவன் சொல்லி முடித்ததும் எவ்வளவு பெரிய விஷயத்தை நாலே வரிகளில் சொல்லி விட்டான் எனத்தான் நினைத்தாள்.

ஆனால்.. அவனாவது நாலே வரி..! அவள் வாழ்க்கை...? நாலே நாட்களில் எப்படியோ மாறி விட்டதே!



ஒரு வழியாக அதன் பின் மோகன் கேட்ட அசட்டுக் கேள்விகளுக்கெல்லாம் எப்படியோ சமாளித்து பதிலளிக்கவும் செய்தாள். ஒரு மணி நேரத்தில் உணவை முடித்து விட்டுக் கிளம்பினர்.

ரெஸ்ட்டாரெண்டை விட்டு வெளி வந்த காரில் ஏறப்போகும் சமயம்தான் மறுபடியும் அந்த அதிர்ச்சியான அதிசயம் அவளுக்கு நடந்தது. யாரை இனி பார்க்கக் கூடாது என்ற அவள் நினைத்தாளோ, அவனை கண்ணனைப் பார்த்தாள் அவள்.



## 10



மதுமதிக்கே பெரும் ஆச்சரியம்! காரில் ஏறப்போன அவளை மோகனின், ஹலோ... ப்ரெண்ட்.... என்ற குரல் தடுக்க திரும்பிப் பார்த்தாள். மோகன் கைகளை உயர்த்தியபடி எதிரே பைக் ஸ்டாண்ட் பக்கம் இருந்த யாரையோ பார்த்துக் கையசைப்பதுதெரிந்தது.

யார்... அது? என கண்களை சுருக்கிப் பார்த்தவள் அதிர்ச்சியின் உச்சிக்கே சென்று விட்டாள். அது.. கண்ணன்... கண்ணனேதான்!

என்ன... மோகன்... அவனை... அவனைத்தான் கூப்பிட்டானா...? அப்படியானால்...?

அவள் திகைக்க மோகன் அவள் பக்கம் திரும்பி, மது என் டியர் பிரெண்ட் ஒருவனை உனக்கு இப்போது அறிமுகப்படுத்துகிறேன். பார்! என்றதும் அவள் விழிகள் மேலும் விரிந்தது. கண்ணன் இவனது டியர் ப்ரெண்டா? கடவுளே...!

அவள் மேலும் யோசிப்பதற்குள் கண்ணன் அவர்கள் பக்கம் சிரித்தபடி வந்து விட்டான். மோகனுடன் அவள் நிற்பதைப் பார்த்ததும் அவனது சிரிக்கும் கண்களில் ஆச்சரியம் கலந்த அதிர்ச்சி ஓடுவதை முதன் முறையாக கவனித்தாள் அவள்.

அவன் உற்சாகமாய் படபடவென அறிமுகப்படுத்த ஆரம்பித்து விட்டான். கண்ணன் கமான்! நல்ல நேரத்தில் தான் வந்திருக்கிறாய். இதோ... இவள்.... மதுமதி' தொழிலதிபர் ராஜமாணிக்கத்தின் ஒரே டாட்டர்.... என்றவன் அதே வேகத்தில் மதுமதி பக்கம் திரும்பி, இது கண்ணன். என் டியர் ப்ரெண்ட், ஆடிட்டராகவும் அன்பு இல்லம் நடத்தும் நிர்வாகியாகவும் இருக்கிறான்... என அறிமுகப்படுத்தி வைத்தான்.

மதுமதிக்கு முன் கண்ணன் கடகடவெனச் சிரித்துவிட்டான். மோகன் திகைப்பாய் வியக்க... அவனே விளக்கினான். நாங்கள் ஏற்கனவே அறிமுகமாகி விட்டோம். மதுமதி தன் பிறந்த நாளை என் அன்பு இல்லத்தில் தான் கொண்டாடினார்கள்... என்றதும் மோகன் புரிந்தவனாய் தலையசைத்துவிட்டு, அதைவிட எங்களைப் பற்றி முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. அது தெரியுமா? என்றான்.

தெரியாதே! என்ன அது? என்றான் அப்பாவியாய்.

நாங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம். நேற்றுதான் நிச்சயதார்த்தம் நடந்தது. உன்னிடம் நேற்று சொல்லி நிகழ்ச்சிக்கு அழைக்கப் பார்த்தால் நீ ஊரில் இல்லை என்று சொன்னார்கள்...

மோகன் படபடவென சொல்லச் சொல்ல அப்படியே அதைக் கேட்டு ஷாக்கானவன் போல் தான் கண்ணனது முகம் மாறியது.

அதை உற்றுக் கவனித்த மதுமதியும் அதிரத்தான் செய்தாள்.

என்ன .... நம் கல்யாணச் சேதியை கேட்டுத்தான் இவன் அதிர்ச்சியடைகிறானா? என அவள் மேலும் ஆவலும் உன்னிப்புமாகவுதம் ஆக கண்ணன் உண்மையிலேயே தடுமாறத்தான் செய்தான்.

அமாம்.... ஆமாம்! நான் நேற்று ஊருக்குப் போயிருந்தேன். அதற்குள் நிச்சயதார்த்தம் முடிந்து கல்யாண தேதியும் குறித்தாயிற்று...?

அவன் கேட்ட விதத்தில் சந்தோஷத்தை விட ஒருவித ஆதங்கமே தொனியாய் வெளிப்பட்டது. மதுமதியை மேலும் துணுக்குற வைத்தது.

குறித்தாயிற்று. அடுத்த மாதம் முதல் வாரம் கல்யாணம்...

கன்கிராட்ஸ்...!

வரவழைத்த உற்சாகத்துடன் மோகனின் கையைப் பிடித்து கண்ணன் குலுக்குவதாகவே அவளுக்குப் பட்டது.

அவள் அவனையேதான் உற்றுக் கவனித்து அவன் நிலையறிய முயன்று கொண்டிருந்தாள்.

கண்ணன் மோகனுடன் பேசிக் கொண்டே இரண்டு மூன்று தரம் அவள் பக்கம் பார்த்த பார்வை சாதாரண பார்வையல்ல.

வழக்கமாய் பார்த்ததும் சிரிக்கும் அவன் கண்கள் இம்முறை சிரிக்கவில்லை.



இமைகள் விரிய பளபளப்பாய்த் தெரிந்த அந்த விழிகள் அவளுக்கு எதையோ உணர்த்துவது போல் எதோ ஒரு செய்தி சொல்வது போலவே தெரிந்தது.

அது... என்ன? என அவள் ஆவலாகி மேலும் அவன் பார்வையை ஆராய்வதற்குள் அவன் விழிகளைத் திருப்பி பார்வையை விலக்கி விட்டான கண்ணன்.

மேலும் இரண்டு நிமிடம்பேசிவிட்டு கண்ணன் விடைபெற்றுச் சென்றான்.

அப்படி அவனிடம் பை! என விடைபெற்றுச் செல்லும்போது அவன் உதடுகள் சிரித்தாலும் அந்த அவனது பளபளப்பான விழிகள் பார்த்த பார்வை?

மதுமதியால் அதை சாதாரணமாதக எண்ணி ஒதுக்கிவிட முடியவில்லை. அவள் இதற்கு முன்தான் கண்ணனை எத்தனையோ முறை சந்திருக்கிறாளே... ஆசை தீர பார்த்திருக்கிறாளே..! அப்போதெல்லாம் அவன் எதையும் வித்தியாசமாய் உணர்ந்ததில்லையே! ஆனால் இப்போது அவன் தன்னைப் பார்க்கும் பார்வை... அந்த விழிகளின் வீச்சு... அதில் ஒரு ஆதங்கம் தெரிவது போல் தெரிகிறதே!

இது.. உண்மையா....? அல்லது வெறும் பிரமையா?



# 11



மோகனின் தங்கை யாமினி அன்று சொன்னபடியே வந்து விட்டாள். யாமினி மோகனைப் போல் இல்லாமல் சரியான வாயாடி. சளசளப்பு பேச்சுக்காரி. அவளது இஞ்சினியரிங் படிப்பிற்கு மூன்று மாத விடுமுறையாம். போரடிக்கிறதாம். தேடி வந்து விட்டாளாம்.

மது இன்று என்ன ப்ரோக்ராம்? என்று அவள் கேட்டபோது மதுமதி விழிக்கத்தான் செய்தாள். ஓரிரண்டு வயதே வித்தியாசமானதால் மதுமதியே ஒருமையில் அழைக்கும்படி அவளை வற்புறுத்தியிருந்தாள்.

ஆனால் யாமினி இரண்டு முறை பார்த்து நான்கு பேச்சுதான் பேசியிருப்பாள். அதற்குள் நெருங்கிய தோழி போல்தான் அவள் பேச்சும்.

அவள் பழக்கமும். சிலருக்குத்தான் இப்படி எளிதில் சுலபமாய் பழகிவிடமுடிகிறது என நினைத்து மதுமதி வியந்திருக்கிறாள்.

மதுமதி பேசாமல் இருக்கவும், அப்படியானால் இன்று என்னுடன்தான் புரோக்ராம்! என்றாள் உற்சாகமாய்.

என்ன ப்ரோக்ராம் யாமினி?

ஒன்றுமில்லை. இன்று என் வீட்டிற்கு வந்து என்னுடன்தான் பொழுதை முழுவதும் கழிக்க வேண்டும்.

சிறு பெண்.. எவ்வளவு குதூகலமாய் நம் வருகையை எதிர்பார்க்கிறாள் என மதுமதியும் கிளம்பி விட்டாள். கொண்டு வந்திருந்த மாருதி ஸ்விப்ட் காரில் மதுமதியை ஏற்றிக் கொண்டு அவளே ட்ரைவ் செய்தாள் யாமினி.

அவள் லாவகமாக டிரைவிங் செய்யு அழகை கண்டு மதுமதி வியந்தாள், யாமினி முன்பே டிரைவிங் படித்து விட்டாயா? என்றாள்.

இல்லை மது.. ஜஸ்ட்... த்ரீ மன்த்ஸ் ஒன்லி...! என்றாள்.

என்ன மூன்றே மாதத்திலா...?

ம்ம்... என் தலையை மேலும் கீழும் அழகாக ஆட்டிய யாமினி, யார் எனக்கு கற்றுக் கொடுத்தார் தெரியுமா? என்றாள்.

அவள் அண்ணன் மோகனைத்தான் சொல்லப் போகிறாள் என மதுமதி யுகித்தவள் தெரியாதது போலவே, யார்? என்றாள்.

அண்ணன் என்றுதானே நினைத்தீர்கள்...? அதுதான் இல்லை...! என வெடிச்சிரிப்பு யாமினி சிரிக்க மதுமதி திடுக்கிடவே செய்தாள்.

அண்ணன் சரியான சோம்பேறி... பிசினஸ் பைத்தியம். கற்றுக் கொடுத்தது அண்ணனுடைய நண்பர் கண்ணன். அன்பு மெர்ஸி ஹோம் நடத்துகிறார்...

என்ன கண்ணனா? வாய் பிளக்காத அதிர்ச்சியுடன்தான் கேட்டுத் திகைத்தாள் அவள்.

என்ன கண்ணனை உங்களுக்குத் தெரியுமா? என்றாள்.

யாமினியும் ஆச்சரியமாய்.

தெரியுமாவா..? என் கண்ணாளனே அவன்தானே.... என சொல்லத் துடித்த வாயை அடக்கிக் கொண்டு தெரியும், அன்பு இல்லம் போயிருக்கிறேன்... என்றாள்.



அதற்குப் பின் யாமினி கண்ணன் தன் வீட்டுக்கு யதேச்சையாய் வரும் போதெல்லாம் கார் டிரைவிங் சொல்லித் தரும்படி நச்சரித்ததையும் அவனும் முகம் சுளிக்காமல் அவ்வப்போது சொல்லிக் கொடுத்ததையும் விவரித்துக் கொண்டிருந்தாள்.

மதுமதியுடமோ புத்தி நழுவி மறுபடி கண்ணனின் நினைப்புகளில் போயிற்று. பின் யாரை மறக்க வேண்டும் நினைக்கக்கூடாது என்று பார்த்தாளோ... அவனையே எல்லோரும் இந்த யாமினிகூட நினைவு படுத்துகிறாள். பின் என்ன செய்ய முடியும்?

யாமினி காரை சோலை போல் மரங்கள் சூழ்ந்த தன் பங்களாவினுள் நிறுத்தி தோள்களைத் தட்டி, இறங்கலாமா? என்றபோது தான் உணர்வுக்கு வந்தாள் மதுமதி.

அடிக்கடி மெய்மறந்து போகுமளவுக்கு என்ன ஒரு நினைப்பு இது..! தன்னைத்தானே கடிந்து கொண்டு யாமினியைப் பார்த்து வரவழைத்துக் கொண்ட செயற்கைப் புன்னகையுடன் கீழே இறங்கினாள்.

அவள் வருவதையறிந்தோ என்னவோ யாமினியின் தாயார் பூரணி அம்மாளும் வாசலுக்கே வரவேற்க வந்து விட்டார்கள். பெயருக்கேற்ற மங்களகரமான முகம் அவர்களுக்கு. இன்முகமாய் வரவேவற்ற பூரணி அம்மாளை நோக்கி பவ்யமாய் நமஸ்கரித்தாள் அவள்.

மோகனும் தந்தை வேதநாயகமும் அலுவலகம் சென்றிருந்தனர். அவளது பங்களாவை விட இரண்டு மடங்கு விஸ்தாரத்தில் பெரிய பெரிய ஹால்களைக் கொண்டு மோகனின் பங்களா அமைந்திருந்தது. வித விதமான மரங்கள், செடிகள், பின்புற தோட்டம் புல்தரை ஜில்லென காற்று என எல்லாமே ரம்மியமான் அழகாய் இருந்தது. இது போன்ற சூழலில் உள்ள பங்களாவிற்கு அவள் மருமகளாய் மாட்டுப் பெண்ணாய் வர அவள் கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும். ஆனால்?

யாமினி அவளே எதுவும் யோசிக்க விடாதபடி விறுவிறுவென வீட்டைச் சுற்றி காண்பிக்க ஆரம்பித்து விட்டாள்.



## 12



மோகன் அன்று வீட்டில் அவள் எதிரில் சோபாவில் அமர்ந்து ஒரு மணி நேரம் பேசினான். அவனது நாளைய ஷீபையர் தொழில் பற்றி கோடிக்

கணக்கில் பண முதலீடு செய்து அதை விரிவாக்கம் செய்வது பற்றி என ஏதேதோ விவரித்துக் கொண்டிருந்தான்.

மதுமதி உருவம் மட்டும்தான் அவனத் எதிரில் உட்கார்ந்திருந்தது தவிர மனம் முழுவதும் கண்ணனைப் பற்றி, கல்யாண விஷயத்தைச் சொன்னதும் அவன் முகத்தில் ஓடிய அதிர்ச்சி பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

அதனால் மோகன் சொன்ன எல்லாவற்றுக்கும் கேட்பது போல் அவளையறியாமல் தலையாட்டிக் கொண்டிருந்தாள் அவள். மோகன் அதற்குள் பேச்சை முடித்து, அப்படியானால் சரி மது, நாளை மாலை ஐந்து மணிக்கு டிக்கெட்டுடன் வந்து விடுகிறேன். தயாராய் இரு....! என்றும்தான் முழு உணர்வுக்கே வந்தாள்.

என்ன.... டிக்கெட்டா... என்ன சொல்கிறீர்கள் மோகன்? என்றாள் திடுக்கிட்டு.

என்ன..... மது.. அதற்குள் மறந்து விட்டாயா? இப்போதுதானே தலையாட்டினாய்... புது ரீலிஸ் படத்திற்கு வருகிறாயா... என்றேனே...? என்றதும் அவசரமாய் சுதாரித்;தவள், அது.... அது... ஐ.. ஆம்... ஸாரி... மோகன்... நான் சரியாய் கவனிக்கவில்லை. எனக்கு சினிமா பிடிக்காதே...! என்றாள்.

அப்படியா...? என மோகனும் தோளைக் குலுக்கியவன்.

தென்.. ஓகே.. உன் சாய்ஸுக்கே விட்டு விடுகிறேன். நாளை இதே போல் மாலை நாம் இருவரும் சேர்ந்து எங்காவது வெளியே சென்று வருவோம். எங்கே செல்ல? என்றான்.

மதுமதி கண்ணனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ டக்கென அவள் வாயிலும் அதே வர, கண்ணனின் அன்பு இல்லத்துக்குச் செல்வோமா? என்றாள் அவள்.

மோகனும் முகம் மலர்ந்தான்.

குட் சாய்ஸ்! எனக்கும் அது ரொம்பவும் பிடிக்கும். நண்பனைப் பார்த்த மாதிரியும் ஆயிற்று. குழந்தைகளுடன் விளையாடியது போலவும் இருக்கும்...!



மோகன் சம்மதித்து விட்டு விடைபெற்று கிளம்பினான்.

கிளம்பும் போதும் சரி. காரில் ஏறி உட்கார்ந்து தலை நீட்டிப் பார்த்தபோதும் சரி மோகன் அப்படி ஒரு சந்தோஷச் சிரிப்பு சிரித்தான். பெரும் பேரழகியான இவள் எனக்கு மனைவி ஆகப் போகிறாளே...! என்ற ஆனந்தப் பூரிப்பில் வந்த சிரிப்பு.

ஆனால் மதுமதி பதிலுக்கு வெறும் தலையாட்டலே செய்தாள். புன்னகைக்க முயன்றும் இதழ்கள் சிரிப்பை உதிர்க்காமல் அடம்பிடித்தன. ஏனோ அவளால் மோகனை கொஞ்சங் கூட தன்னைக் கட்டிக் கொள்ள இருக்கிறவன் என்ற ஸ்தானத்தில் உட்கார்த்தித வைத்து பார்க்க முடியவில்லை.

வேகமாய் நடக்கும் திருமண காரியங்களைப் பார்த்தால் இது இப்படியொரு விட்டேற்றியான நினைப்பு ஆபத்தே.. என்ற பயமும எழுந்தது.

கூடவே தாய்க்கும் தந்தைக்கும் இந்த மோகனது திருமண சம்பந்தத்தில் அளவு கடந்த சந்தோஷம் என்பதைப் புரிந்து கொண்டாள். அதிலும் தந்தை ராஜமாணிக்கம் அடிக்கடி வந்து அவளிடம், தாங்க்ஸ் மது, நீ இவ்வளவு சீக்கிரம் மனம் மாறுவாய். மோகனை கட்டிக்கொள்ள சம்மதிப்பாய் என நான் கனவிலும் நினைக்கவில்லையம்மா... என மனம் உருகினார்.

மறுநாள்....

மோகன் அன்பு இல்லத்துக்கு அழைத்துச் சென்றான் அங்கு இருவரும் ஒருமணிநேரம் இருந்தார்கள். கண்ணன் அங்கு இல்லை வெளியில் எங்கோ சென்றிருக்கிறான் என்பது மதுமதிக்கு தெரியவந்தபோது அவளுக்கு பெரும் ஏமாற்றமே ஏற்பட்டது. வேறு வழியில்லாமல் குழந்தைகளுடன் விளையாடி பொழுதை கழித்துவிட்டு இருவரும் கிளம்பினர்.

---

நாமதுமதிக்கு குழப்பம் தீர்ந்தபாடில்லை. தன்னை மீறி எல்லா விஷயங்களும் நடந்து விடுமோ என்கிற பயமும் அதிகரித்தது.

இப்படியே இருந்தால் மனநிலை மாறி பித்துப் பிடித்துவிடும் என்று பயந்தவள் மறுநாளே தந்தையிடம் சொலலிக் கொண்டு ஒரு வார கல்லூரி லீவிற்கு அன்பு இல்ல சேவை பணிகளில் ஈடுபட போவதாய் சொல்லி கிளம்பி விட்டாள்.

அந்த வாரம் அன்பு இல்லத்தில் பக்கத்து கிராமங்களுக்கு... உள்ள சேரிப் பகுதிகளுக்கு சென்று சேவை செய்ய திட்டமிட்டிருந்தனர். அதில் அவர்களோடு இணைந்து கொண்டாள். சேரிப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது, அந்த ஏழை மக்களுக்கு சுகாதாரம், அரசாங்கத்திட்டங்கள் பற்றி எடுத்துரைப்பது என தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

அந்தச் சேவை முகாமிற்கு கண்ணன் தலைமைப் பொறுப்பு ஏற்று அவன்தான் தேவையான இன்ஸ்ட்ரக்ஷன்களை கொடுத்து வழிநடத்திக் கொண்டிருந்தான். அதனால் மதுமதியிடம் அவன் நிறைய முறை பேச வேண்டி இருந்தது. அவள் எவ்வித சலனமுமில்லாதவள் போல்தான் கேட்டுக் கொண்டாள்.

அவனும் எவ்வித உணர்ச்சியுமின்றி பேசியது போல்தான் அவளுக்குத் தோன்றியது. அதனாலே அவள் கொண்டிருந்த சேவையில் காரியத்திலே தன் கவனத்தை செலுத்தினாள்.

அந்த ஒருவார முகாமும் எவ்வித சலனமுமில்லாமல் சென்றது. மறுவாரம் ஆசிரமத்திற்கு வந்ததும் மதுமதி தன்னை ஆசிரம அலுவலக பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டாள்.

நிறைய வரவுக் கணக்குகள், டோனர்களின் முகவரிகள், பேங்கிற்கு அனுப்ப வேண்டிய செக்குகள் என பணிகளில் முடங்கிக் கிடக்க சுறுசுறுப்பாய் செயல்பட்டு வேலைகளை முடித்தாள்.

தினம் தினம் அவள் அப்படி பணி செய்ய கண்ணன் முன் இருக்கும் இருக்கையில்தான் அமர்ந்து பார்க்க வேண்டியிருந்தது. அவள் முழுக் கவனத்துடன் வேலை பார்ப்பதை அவ்வப்போது ஓரக்கண்ணால் கண்ணன் கவனித்துக் கொண்டிருப்பதையும் அவள் உணர்ந்தாள்.

கண்ணன் உண்மையிலே என்ன நினைக்கிறான். அவன் மனதில் என்ன இருக்கிறது? என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவளுள் கூடியது.

மதியம் சொன்னபடியே வேலை முடிந்ததும் அவளை அழைத்துக் கொண்டு டிரைவ் இன்றுக்கு கிளம்பினான் கண்ணன்.

ஹோட்டலை அடைந்து மெனு கார்டைப் பார்த்து உணவு வகைகளை ஆர்டர் செய்தான்.



அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமதி. ஏனோ.. இப்போதெல்லாம் அவன் கண்களைச் சந்தித்தால் அதிலிருந்து அவளது கருவிழிகளை விலக்க அவளால் எளிதில் முடியவில்லை. பிடுங்கித் தான் வலுக்கட்டாயமாய் வேறுபுறம் திருப்ப முடிகிறது.

அப்படியே இம்முறையும் பிடுங்கி வேறுதிசையில் கண்களை வைத்தாள். ஆனாள் கண்ணன் அவளை குறுகுறுப்பாய் பார்த்தான்.

மதுமதி...

ம்...

அது... ஒரு முக்கியமான விஷயம். அதை உன்னிடம் சொல்ல தயக்கமாய் இருக்கிறது...

தயக்கமா... என்னிடமா?

இம்முறை மதுமதியை குறுகுறுப்பு தொற்றிக் கொண்டது ஆவலாய் அவனைப் பார்த்தாள்.

தயக்கமில்லாமல் சொல்லுங்கள்.... என்றாள். இம்முறை அவளது கருவிழிகள் நேராய் அவனோடு விழிகளில் மோதி ஐக்கியமாகிவிடுவது போலிருந்தது.

நான் சொல்ல வரும் விஷயம் உனக்கு பிடிக்கும் பிடிக்காதா என்று தெரியாது.. கண்ணன் பீடிகையை நீட்டினான்.

முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள்... இம்முறை கெஞ்சலாகவே அவள் குரல் ஒலித்தது.

ம்ம்... சொல்கிறேன்..

கண்ணன் தயக்கம் நீங்கினான். மது, காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்றான் நேரிடையாய் அவளைப் பார்த்தவாறு.

மதுமதி இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் இனம்புரியா உணர்ச்சியொன்று எழும்பி அந்தரத்தில் தட்டாமாலை போல் ஒரு சுற்று சுற்றி அவளை ஒரு ஆட்டு ஆட்டியது.

அ...அ...அது...அது...

பதில் சொல்ல முடியாமல் தவித்தாள்.

சரி, நேரடையாவே விஷயத்துக் வாரேன்... என்றான், அவன் மேல் பார்வையை விரித்தபடி.

மெய்சிலிர்க்க விக்கித்துப் போனவளுக்கு அடுத்து அவன் பேசிய வார்த்தைகள் இதயத்தில் சாட்டையடியாய் வழுந்தது.

நான் ஒரு பெண்ணை காதலிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கேன். அவ பேரு ஆஷா! அமைதியாகச் சொன்னான் கண்ணன்.



## 13



கண்ணன் சொல்லச் சொல்ல மதுமதியின் தலையில் இடிதான் விழுந்தது. நான் ஒரு பெண்ணை காதலிக்க வேண்டிய கட்டாயம். அவள் பெயர் ஆஷா... என்ற போது விளையாடுகிறானோ என்றுதான் நினைத்தாள். ஆனால் அவனது சீரியஸான முகம் உண்மையை பறைசாற்றியது.

யார் இந்த ஆஷா?

ஆஷாவைப் பற்றி விரிவாகவே சொல்ல ஆரம்பித்தான் கண்ணன்.

நிர்மலா, நான் சிறுவதிலே தாய் தந்தையை இழந்து மாமா வளர்ப்பில் உருவானவன். என் மாமாதான் அன்பா ஆதரவா என்னை படிக்க வைச்சு ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்தார். நான் நிர்வகிக்கிசற கம்பெனியில பாதி கம்பெனிகள் அவர் உருவாக்கினது தான். எனக்கு தொழில்ல ஒவ்வொரு விஷயங்களா கற்றுக் கொடுத்தது தொழில் சூட்சமங்களை புரிய வைத்ததும் அவர்தான். அதனால அவருக்கு நான் ரொம்பவும் நன்றிக்கடன் பட்டிருக்கேன். அந்த மாமாவேட பெண்தான் இந்த ஆஷா...!

ஒரு கணம் நிறுத்திவிட்டு அவளையே உற்றுப் பார்த்தான் கண்ணன்.

உடைந்து போன கண்ணாடி சில்லுகளை பொறுக்கி எடுப்பது போல் துண்டாகிப் போன இதயத்தை இறுகப் பிடித்துக் கொண்டு எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தாள் மதுமதி.



அவள் உணர்வில் இருக்கிறாள இல்லையாவென்று சந்தேகம் வந்துவிட்டது. கண்ணனுக்கு.

மது, கேட்டுக் கொண்டுதானே இருக்கிறாய்? என்றான்.

ம்...ம்....

சுரத்தில்லாமல் தலையசைத்தாள் மதுமதி.

அவன் தொடர்ந்தான்.

அந்த ஆஷாவைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்பது மாமாவின் விருப்பம். அவரது சொத்துக்கள் முழுதும் எனக்கே கிடைக்க வேண்டும். அவைகளை நானே நிர்வகிக்க வேண்டும் என்பது அவரது தீராத ஆசை... அந்த சொத்துக்களை நான் ஆசிரமத்து சேவைக்கு கூட உபயோகப்படுத்த சம்மதம் சொல்லிவிட்டார்! அவன் மறுபடியும் நிறுத்தினான்.

அவளுக்கு எரிச்சலாய் இருந்தது. அவன் பேச்சை அப்படி நிறுத்துவானாம். அவள் சுவாரஸ்யமாய் கேட்பது போல் ம்ம்.. கொட்ட வேண்டுமாம். என்ன ஒரு இக்கட்டான நிலை...?

வேறு வழியில்லாமல் அதே எரிச்சலுடன், ம்.. என்றாள்.

அடுத்த **அக்ஷயா** மாத நாவலில்

**அகிலாகோவிந்த்** எழுதும்



**"நந்தவனத்து மயில்...!"**

**விறுவிறுப்பான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!**

மறுநாள்..... கண்ணன் சொன்ன ஆஷா நேரிலே வந்துவிட்டாள்

அவளை பார்த்த மதுமதிக்கு அந்த கணம் நெருப்பில் விழுந்தாற்போல் உடம்பே துடித்தது. ஹாய் என்றபடி ஆஷா கண்ணனை இறுக கட்டியணைத்து கொண்டிருந்தாள். தான் விரும்பியவனை தன் கண் முன்னே இன்னொருவள் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவனும் அதை பார்த்துக் கொண்டிருக்கிறான். கையில் ஏதும் இல்லை. இருந்தால் அந்த ஆஷா மண்டையில் ஓங்கி போடலாம் போலிருந்தது.

எழுந்த ஆக்ரோஷமான உணர்வை மறுகணமே தன் நிலை உணர்ந்து அடக்கினாள். ம்ஹூம்! என்ன ஒரு நினைப்பு? இருந்தாலும் தவிக்கும் மனநிலையை அடக்க முடியாமல் அந்த கணத்தில் கண்ணனின் நிலை எப்படியிருக்கிறது என பார்த்தாள். ஆஷா இறுக அணைத்திருந்தாலும் அவன் முகத்தில் பெரிதாய் ஏதும் சந்தோஷக் களை இல்லாமல் சாதாரண உதட்டுப் புன்னகையே இருந்தது. இனம் புரியா ஆறுதலை ஏற்படுத்தியது மதுமதிக்கு.

கடன்காரி.. இன்னும் தழுவலை விட மாட்டேங்கிறாளே...? என மேலும் தவிப்பதற்குள் ஆஷா கண்ணனை விடுவித்தாள். அவன் கையைப் பிடித்து பெரிதாய் குலுக்கினாள். கண்ணா.. நீ மாறவே இல்ல..... அப்படியே இருக்க...! என்றாள்.

ஆனால்.. நீ... மாறிட்ட ஆஷா... என்றான் கண்ணன் முத்து உதிர்த்தபடி

மாறிட்டனா.. எப்படி... எப்படி...?

ஆஷா... வியக்க... அவன் தடித்துப் போயிருந்த அவளது இடுப்பளவை காட்டினான். இதான் கடைசிவருஷம்... அடுத்த வருஷம் இந்த ஜீன்ஸையெல்லாம் உன்னால் போட முடியாது....

கண்ணன் சிரிக்க, ஹேய்... யு... நாட்டி! என்றபடிட ஆஷாவும் சிரித்தாள். இருவரும் இப்படி பேசிப்பேசி சிரிக்க அங்கு நின்ற மதுமதி பாடுதான் பெரும்பாடாய் இருந்தது. முகத்தை எப்படி வைக்க எங்கு வைக்க என்று புரியாமல் தவித்தாள்.

கொஞ்ச நேரத்தில்தான் அதை உணர்ந்த கண்ணன் அவசரத்துடன்... ஓ... இ... ஆம்... ஸாரி... என்றபடி அவள் பக்கம் திரும்பினான்.



இதுதான் ஆஷா... என்றான் அறிமுகப்படுத்தியபடி

மறுபடி ஆஷா பக்கம் திரும்பி, இது மதுமதி! என்றான்.

ஆஷா முகம் சுருக்கிப் பார்க்க மதுமதி வலுக்கட்டாய புன்முறுவல் ஒன்றை தவழ விட்டவாறு ஆஷாவைப் பார்த்து கை கூப்பலாய் நமஸ்கரித்தாள்.

பதிலுக்கு ஒரு சின்ன தலைவெட்டலுடன் கண்ணனைப் பார்த்தவள், மதுமதி.... என்றபடி இழுத்தாள்.

ம்ம்... என்னுடைய பர்ஸனல் செகரட்டரி... என்று முடித்து வைக்கவும் ஆஷா திரும்பி மதுமதியை மேலிருந்து கீழ்வரை ஒரு அளவெடுத்தாள்.

மயில்தோகை பார்டருடன் மஞ்சள் வண்ண சேலை கச்சிதமாய் உடம்போடு ஒட்டியிருக்க... அலங்காரம் எதுவுமில்லாமல் பளிச்சிட்ட மதுமதியின் நளினமான அழகு அவளை வியப்பிலாழ்த்தியது. மதுமதியும் அப்போது தான் ஆஷாவை கண்களை விரித்துப் பார்த்தாள். பாப் செய்யப்பட்டு நாய் வால் போல் தொங்கும் செம்பட்டை கலந்த கேசம். முகத்தில் அதீத மேக்கப்பை பளீச்சாக்கும் நவீன ஃபேர்ஃப்யும் சமாச்சாரங்கள், உதட்டில் ரோஸ் லிப்ஸ்டிக் சற்றே பருத்த உடல்வாகு, உடல் குட்டையை மறைப்பதற்காக பெரிதான ஹைஹீல் காலணிகள்... ம்ஹூம்... இதில் எது கண்ணனை ஈர்க்கப் போகிறது? எதைக் கண்டு மயங்கப் போகிறான்?

நினைத்தவாறு மதுமதி ஆஷாவையே வைத்த கண்ணாய் பார்க்க, இருவரும் ஒருவரையொருவர் வியப்பாய் பார்ப்பதை கண்ணன் அதிசயமாய்ப் பார்த்தான்.

ஆனால் ஆஷா மறுகணமே ஒரு அலட்சிய வெட்டு வெட்டி திரும்பியவள் கமான் என்றபடி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்துவிட்டாள்.

கண்ணனும் குட்டி போட்ட பூனையாய் பின் தொடர ஆரம்பித்தான்.



# 14



மறுநாள்....

ஆஷாவை கண்ணன் ஆசிரமத்திற்கே கூட்டி வந்தான்.

அங்கு ஆஷாவும் பொழுதை போக்கினாள், மதியம் அனைவரும் டைனிங்ஹாலில் சாப்பிட உட்கார்ந்தார்கள்

பின் சாப்பிட்டு முடிந்து முன்புறம் வந்தார்கள்.

மது வா... உட்கார்... என்று சோபாவைக் காட்டினான்.

ஆஷா அந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அலட்சியமாய் உட்கார்ந்திருந்தாள். ஒரு ஆண் முன் ஒரு பெண் இப்படியா அமர்த்தலாய் அமர்வாள்? யோசிப்புடனே பக்கத்தில் போய் உட்கார்ந்தாள் மதுமதி.

அதற்குள் ஆஷா ஏதோ வேலையிருப்பது போல் எழுந்து உள்புறம் நோக்கி நடந்தாள்.

அவள் சென்றதும் ஒரு பெரிய அமைதி நிலவியது. கண்ணன் திரும்பவும பேச்சை ஆரம்பித்தான்.

மது ஆ.. ஆஷா.... வைப் பார்த்தாயல்லவா... எப்படி.... எப்படி...? என்றான்.

எப்படி என்றால்...?

உனக்கு பிடித்திருக்கிறதா.....?

சிரிப்பு வந்துவிட்டது. மதுமதிக்கு.

உங்களுக்குத்தானே பிடிக்க வேண்டும். அதைச் சொல்லுங்கள்.....

ம்ஹூம்... என்னைவிட ஆஷாவிற்குத்தான் பிடிக்க வேண்டும் அதுதான் முக்கியம்.....

ஆஷாவுக்குத்தான் உங்களை பிடித்திருக்கிறதே....

என்ன சொல்கிறாய்... நீ....?

இன்னும் புரியவில்லையா? ஆஷாதான் வந்தது முதல் உங்களுடன் விழுந்து விழுந்து பேசுகிறாள். நீங்கள் எது சொன்னாலும் சிரித்து



குலுங்குகிறாள். போதாக்குறைக்கு விமான நிலையத்தில் காதல்கள் போல் இருவரும் கட்டிப் பிடித்து நெருக்கமாய் நடந்து வருகிறீர்கள். இது போதாதா?

மூஞ்சைத் தூக்கும் கோபத்துடன் மதுமதி சொல்ல இம்முறை சிரித்துவிட்டான். கண்ணன். அட... அதெல்லாம் காதல் என்று நினைத்துவிட்டாயா...? என்று அடக்க முடியாமல் சிரித்தாவன், மது அதெல்லாம் ஆஷாவின் சுபாவம பழக்க வழக்கம். நிச்சயமாக காதல் இடையாது.... என்றான்.

எனக்கு அப்படித் தோணவில்லை... என்றாள் விடாப்பிடியாய்.

உன்னால் நம்ப முடியவில்லையா? என்றான் அவன் மறுபடியும்.

ஆமாம் நம்பமுடியவில்லைதான்! மேலும் இவ்வளவு சிரித்துப் பேசுபவளிடம் சுற்றி வளைக்காமல் நீங்கள் கேட்டு விடலாம்....

கேட்டுவிடவா? எதைக் கேட்கச் சொல்கிறாய்?

காலைப் பற்றியல்ல.. கல்யாணம் பற்றி...! நேரிடையாக என்னை கல்யாணம் செய்து கொள்கிறாயா.... என்று கேட்டு விட வேண்டியதுதானே?

ஓஹோ.... நான் அப்படிக் கேட்டுவிட்டால் அவள் உடனே சரி என்று சொல்லி விடுவாளா....?

கண்டிப்பாய் சொல்லுவாள்... அழுத்தந்திருத்தமாய் மதுமதி சொல்லவும்.... உள்ளிருந்து ஆஷா வரவும் சரியாயிருந்தது. கண்ணன் உடனே மதுவிடம், இதோ அவளே வந்துவிட்டாள். உன் முன்பாகவே கேட்டுவிடுகிறேன்... என்று கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு ஆஷா பக்கம் திரும்பி ஆஷா... என்றழைத்தான். ஆஷா பக்கத்தில் வந்தாள்.

என்ன கண்ணன்?

பேசாமல் என்னை கல்யாணம் செய்து கொள்கிறாயா?

என்றான்.

ஆஷா ஹாஸ்யம் கண்டவள் போல் சிரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

பின் நிறுத்தி, இப்படியெல்லாம் என்னிடம் கேட்கலாமா கண்ணன்? உங்களை மணக்க நான் இப்போதே இந்த நிமிடமே ரெடி! என்றாள் உற்சாகமாய்.



# 15



ஒரு வாரம் இப்படியே கண்ணன் ஆஷா காதல் திருவிளையாடல்களிலே பொழுது ஓடியது. மதுமதியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தாள். எச்சரித்தாள்.

இவளை மேலும் திகைப்பூட்டும்படி மறு வாரம் இன்னொரு விஷயமும் நடந்தது. மோகன் தந்தையிடம் வந்து கல்யாணத்திற்கு அவசரப்படுத்த ஆரம்பிக்க... தந்தை ராஜமாணிக்கம் மதுமதியைத் தேடி வந்துவிட்டார்.

சொல் கண்மணி, அந்தக் கண்ணனுக்கு ஆஷா என்பது முடிவாயிற்று போல் தெரிகிறது. இன்னும் சங்க கால காதலி போல் அவரையேவா நினைத்து உருகிக் கொண்டிருக்கப் போகிறாய்? உன்னையே உயிராக நினைத்து உருகும் மோகனைப் பார். அவர் உன்னை ரொம்பவும் விரும்புகிறார். அவரைத் திருமண்ம செய்து கொள்கிறாயா? ஏற்பாடுகள் செய்யட்டுமா? எனக்கும் வயது ஆகிறது அல்லவா அம்மா? தந்தை கெஞ்சலும உருக்கமுமாய் கேட்க மதுமதிக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

மறுக்க வார்த்தைகளின்றி மௌனமாய் தலையசைக்கத்தான் அவளால் முடிந்தது. எந்த வித உணர்வுமின்றி அன்றிலிருந்து இயந்திரம் போல்தான் நடமாடினாள்.

அவளால் எந்தவொரு வேலையிலும் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. நாளுக்கு நாள் நடக்கும் விஷயங்கள் அவளை ரொம்பவும் பயம் காட்டியது. மதுமதிக்கு ஒன்றம் புரியவில்லை. ஒரு கணம் நடப்பதை நினைத்தால் தலையே சுழன்று விடும் போல் இருந்தது. ஒருபுறம் தந்தை அவசஅவசரமாய் மோகனுக்கும் தனக்குமான திருமண ஏற்பாட்டை செய்து கொண்டிருக்க... மறுபுறம் கண்ணன் ஆஷாவை உடனடியாக திருமணம் செய்து கொள்ளப் போவதாக மும்முரமாகி விட்டான்.

தந்தை ராஜமாணிக்கம் குறித்த அதே தேதியில் அவனும் முகூர்த்தத்தைக் குறித்தான். மது, மோகன் உன் கழுத்தல் தாலி



கட்டும்போது நானும் பக்கத்து மணமேடையில் ஆஷாவிற்கு தாலி கட்டுவேன்....! என சொல்லியபோது அவள் பேச்சு எதுவும் வரமுடியாதவளாய் தவிக்கத்தான் செய்தாள்.

அப்படியானால் நீங்கள் ஆஷாவை விரும்பி மனப்பூர்வமாய் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?

ஆமாம்.... என்றான் அவன் அழுத்தந் திருத்தமாக.

அதற்கு மேல் மதுமதி அங்கு நிற்கவில்லை. நிறக்கப் பிடிக்காமல் ஓடி வந்துவிட்டாள். இரண்டு நாள் ஒன்றும் ஓடாதவளாய் வெறுமையாய் கழித்தாள். அதற்குள் காரியங்கள் மேலும் வேகம் பிடித்தன. அப்பா கல்யாண இன்விடேஷன் டிசைன்களை செலக்ட் செய்து அவளிடம் காட்டினார்.

மனமில்லாமல் தலையாட்டத்டதான் செய்தாள் அவள்.

இனி அப்பாவிடம் என்ன சொல்ல முடியும்? ஆஷாவை கட்டிக் கொள்ளப் போகிற கண்ணனை இன்னமும் விரும்புகிறேன் என அவளால் எப்படி சொல்லமுடியும்.?

அதைவிட அடுத்து நடந்த இன்னொரு விஷயம் அவளை மிகவும் ஆச்சரியமும் எரிச்சலையும் ஏற்படுத்தியது.

திருமண நாள் குறிக்கப்பட்ட தினத்தில் அன்று நிறைய முகூர்த்தமாம். அதனால் ஊரில் திருமண மண்டபங்களுக்கு டும் கிராக்கியாம். எல்லாம் உடனே உடனே புக்காகி விடுகிறதாம். அதனால் கண்ணன் ஆஷா, தங்கள் திருமணத்திற்கு மண்டபம் கிடைக்காமல் அவர்கள் மதுமதி தந்தை ராஜமாணிக்கதிடம் வந்து முறையிட அவர் அவர் பெரிய மனதுடன் மதுமதி மோகன் திருமணத்திற்காக புக் செய்து வைத்திருக்கும் பெரிய திருமண மண்டபத்திலேயே அவர்களது கல்யாணத்தையும் சேர்த்து நடத்திவிடலாம் என அனுமதி கொடுத்து விட்டாராம்!

விஷயத்தை தந்தை சொன்னபோது அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

திக்பிரமை பிடித்தாற்போல் நின்றாள்.

மேலும் ஒரு வாரம் ஓடியது.

இன்று மணநாள்.

விடிந்தால் கல்யாயம்.

எவ்வித உணர்வுமின்றி எழுந்தவளை உறவுக்காரப் பெண்கள் இழுத்துக் கொண்டு போய் அலங்கரிக்க ஆரம்பித்தனர்.

அடுத்த அரை மணி நேரத்தில்... மணமகளாய் மண்டபத்தில் தலையை குனிய வைத்தபடி நுழைந்தவரின் கண்கள் இரண்டு மணமேடைகள் பக்கத்தில் பக்கமாய் அமைக்கப்பட்டதை கண்டு திகைத்தன.

கடவுளே! என்ன இது? அவள் கண் முன்னாடி அவள் பார்க்க கண்ணன் அந்த ஆஷாவுக்கு தாலி கட்டப் போகிறானா?

திகைத்து நொந்தவளாய் நடந்தாள். மணவறை சடங்குகள் ஒவ்வொன்றாய் நடக்க ஆரம்பித்தன.

அவள் எவ்வளவு நேரம்தான் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருக்க முடியும்? தெரிந்தவர்கள் தோழிகள் வரும்போது தன்னை மீறி வலுக்கட்டாயமாய் சிரிக்க வேண்டியதாயிற்று.

அப்போதும் ஒரு சோகப் புன்னகையை மெல்லப் புரிந்து சமாளித்தாள்.

இதோ முகூர்த்த நேரம் நெருங்கிவிட்டது.

அவளை மணமேடைக்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தார்கள். பவிடா போல் குனிந்த தலையுடன் நடந்து குனிந்தபடியே உட்கார்ந்தாள்.

கெட்டி மேளம் முழங்க... கொஞ்ச நேரததில் தாலியும் கட்டி அவள் கழுத்தில் மூன்று முடிச்சும் போட்டான் மாப்பிள்ளை.

அந்த நேரத்தில் நிமிர்ந்து தற்செயலாய் மாப்பிள்ளையைப் பார்த்தவள் அப்படியே அதிர்ந்தாள்.

அங்கு மாப்பிள்ளையாய் அவளுக்கு தாலி கட்டியது... கண்ணன்... கண்ணனேதான்!



# 16



மதுமிதிக்கு ஒரே திகைப்புதான்.

இன்பமான அதிர்ச்சிதான்!



அவளுக்கு தாலி கட்டியது மோகன் இல்லை. அவள் விரும்பிய கண்ணன்தான்!

அப்படியே நிமிர்ந்து பக்கத்து மணமேடையைப் பார்த்தவளுக்கு இன்னும் பலத்த அதிர்ச்சி!

அங்கு... மணமேடையில் மணக்கோலத்தில் அவளுக்கு தாலிகட்டியபடி மாப்பிள்ளையாய் பக்கத்தில் மோகன்!

அட... இங்கு என்னதான் நடக்கிறது?

அவள் திரும்பி அங்கும் இங்கும் பார்த்து விழிக்க.

..... எல்லோரும் குறும்புப் புன்னகையுடன் அவளைப் பார்ப்பது போல் தோன்றியது.

திரும்பவும் நம்ப முடியாமல் கண்ணன் பக்கம் பார்த்தாள்.

.... இங்கு என்னதான் நடக்கிறது. எனக்கு ஒன்றுமே புரியவில்லையே...!

மலங்க மலங்க விழித்தவளை புன்னகையுடன் பார்த்து அவள் கைகளை அழுத்தினான் கண்ணன்.

பதட்டம் வேண்டாம்... எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது... என்றான்.

சரியாக நடக்கிறதா.......? நீங்கள் மாப்பிள்ளையாய் எப்படி....?

அட... புரியவில்லை...? மணப்பொருத்தம் பார்த்தேன். நீ தான் எனக்கு சரியான மணப்பெண் எனத் தோன்றியது. அதான் படக்கென மோகனைத் தள்ளிவிட்டு நான் ஏறி உட்கார்ந்து கொண்டேன். சொல்லியபடி கடகடவென கண்ணன் சிரிக்க அவளுக்கு மூக்கு நுனி சிவக்கத்தான் செய்தது.

ஐயோ! இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம். நடந்ததைச் சொல்லுங்கள்...! என்றாள் பொறுக்க முடியாதவளாய்.

அவள் அவசரத்தைக் கண்ட கண்ணன் அதே புன்னகையுடன் விளக்க ஆரம்பித்தான்.

மது பதட்டம் வேண்டாம் நீ நினைப்பது போல் குழப்பம் இல்லை எல்லாம் சரியாகத்தான் நடக்கிறது... என்றபடி நீள மூச்செடுத்தவன், ஆனால் மது... எல்லாவற்றையும் இங்கு மணமேடையில் வேண்டாம். சடங்குகள் முடியட்டும். சொல்கிறேன்... இப்போது நடந்தது நடப்பது... உனக்கு சந்தோஷம்தானே? எனவும் சூழ்நிலை புரிந்து பலமாய் தலையாட்டினாள் அவள்.

மறுபடியும் பொறுமை காத்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் சடங்குகள் முடிந்து பால் பழம் சாப்பிட்டு இருவரும் தனியறைக்கு வர அவள் கேட்காமலே விளக்க ஆரம்பித்தான் கண்ணன.

மது... இது நீ நினைப்பது போல் திடீரென ஏற்பட்ட மாற்றம்தான். அதுவும் ஆஷா ஊரிலிருந்து வந்ததும் ஏற்பட்ட மாறுபட்ட சூழல்தான்...

என்ன ஆஷா வந்ததுமா... எப்படி?

சொல்கிறேன். முதலில் நம் சூழலை விளக்குகிறேன். நீ என் மீது காதல் கொண்டிருந்தாள். நானும் உன் மீது அதே போல் காதல் கொண்டிருந்தாலும் அதை வெளிப்படுத்தாது அமைதியாய் இருந்தேன். ஆனால் மோகனும் உன்னை விரும்பி உன்னை மணமுடிக்க ஆசைப்பட்டான். இந்தச் சூழ்நிலையில்தான் ஆஷா இங்கு நுழைந்தாள். அவள் நீ நினைப்பது போல் என் காதலியும் இல்லை. என்னை காதலிக்கவும் இல்லை. அவள்தான் நம் மூவரது சூழ்நிலையையும் புரிந்து ஒரு திட்டம் தீட்டினாள்.

திட்டமா....?

ஆம்... இப்படி முக்கோணக் காதலாய் நாம் இருப்பதை உணர்ந்து அவளாகவே விரும்பி ஒரு திட்டம் தீட்டினாள்... அதன்படி மோகனைத் தேடிச் சென்று பேசினாள். நீ என் மீது வைத்த காதலை புரியும்படி விளக்கினாள்...

அது எப்படி?

அதாவது என்னை மனதில் நினைத்துக் கொண்டு மோகனுடைய மனைவியாய் நீ வாழ்வது எப்படி முடியும்...? அதை மோகனால் எப்படி சகித்துக் கொள்ள முடியும்? என்பதையும் கேள்விகளாய் எழுப்பி அவனுக்கு விளக்கினாள். அவனை தீவிரமாய் சிந்திக்க வைத்தாள். அப்படி அவர்கள் இருவரும் சந்தித்து பேசியதாலே, அந்த பேச்சு மூலமாகவே அவர்கள் இருவருக்கும் அவர்கள் அறியாமலே ஒருவித ஈடுபாடு வந்தது. இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரியும்படி சந்தர்ப்பமும் சூழலும் அமைய அதுவே காயாய் பூத்து பழமாய் கனிந்து காதலாக உருப்பெறவும் ஆரம்பித்து விட்டது. ஒரு கட்டத்தில் இருவரும் மனம் ஒத்துப்போய் நிஜமான காதலர்களாகவே ஆகிவிட்டனர்...

அப்படியா... நிஜமாவா...? என்ன மோகனும் ஆஷாவும் காதலர்களாகிவிட்டார்களா?



கண்ணன் மென்மையாய் புன்னகை புரிந்தவன் தொடர்ந்தான். அதாவது நம் காதலை அவர்கள் பேசப் போய் அர்களது காதல் ஸ்டார்ட் ஆகி காதல் வானில் பறக்க ஆரம்பித்துவிட்டது. அப்படிப் பறக்க ஆரம்பித்ததும் நம் காதலுக்கு தடையாய் இருந்தது எல்லா விஷயங்களும் பனிபோல் உருகி வெண்ணெய் திரண்டாற் போல் கல்யாணத்தில் முடிந்துவிட்டது. என்ன புரிகிறதா?

அவன் கேட்க மதுமதியின் தலை புரிந்ததற்கு அடையாளமாய் கிடுகிடுவென ஆடியது.

எல்லாம் சரி, எனக்கு ஒரு விஷயமும் தெரியாது. தெரியாமல் ஏன் மறைத்தீர்கள்? அதுவும் எனக்கும் மோகனுக்கும், உங்களுக்கும் ஆஷாவிற்கும் கல்யாணம் நடப்பது போல் அல்லவா எல்லோரும்; சொல்லி இன்விடேஷ் கூட அடித்து....

அவள் பேச்சை முடிக்கும் முன்பே கடகடவென சிரித்தான் கண்ணன். பின் செல்லமாய் அவள் தலையைத் தட்டி சின்னதாய் வலிக்காத குட்டு ஒன்றும் வைத்தான்.

திகைத்து விழித்தவளின் முகத்தை ஜன்னல் பக்கம் திருப்பி வெளியே பளீரிட்டுக் கொண்டிருந்த திருமண அறிவிப்பு பலகை எழுத்துக்களைக் காட்டினான். நீ மட்டும் மணப்பெண்ணாய் கல்யாண மண்டபத்தில் நுழையும் போது தலையை குனிய வைக்காமல் நிமிர்ந்து வைத்திருந்தால் அப்போதே உனக்கு எல்லா விஷயங்களும் புரிந்திருக்கும். அங்கு என்ன எழுதியிருக்கிறது பார்.... என காட்டினான்.

ஆவலாய் பார்த்த மதுமதி அதிரத்தான் செய்தாள்.

அங்கு... கண்ணன் வெட்ஸ் மதுமதி... மோகன் வெட்ஸ்.... ஆஷா... என தங்க நிற எழுத்துக்கள் மின்னிக்கொண்டிருந்தது.

அட.... இதைக் கூட கவனியாமல் இருந்திருக்கிறோமே...! என மருதாணி விரல்களால் தன் தலையையே ஒரு தட்டு தட்டிக் கொண்டு அசடாய் சிரித்தாள் அவள்.

மது..., இப்போது புரிகிறதா... உனக்கு காட்டப்பட்ட ஒரே ஒரு இன்விடேஷனில் தான் அப்படி மாற்றி ப்ரிண்ட் செய்து உன்னை பயங்காட்டி விளையாடினோம். அதுவும் உன் தந்தையின் சம்மதத்துடன் அவரையும் எங்கள் நாடகத்தில் நடிக்க வைத்ததுதான்.... அவன் சொல்ல அப்போதுதான் அவளுக்கு திடும்மென தந்தையின் ஞாபகம் வந்தது. ஆமாம் அவர் எப்படி கண்ணனை திருமணம் செய்ய சம்மதம் சொன்னார். அதை மற்றதே

போய்விட்டேனே....! மோகனை கல்யாணம் செய்தால்தானே தொழில் நஷ்டம் சரியாகும் என்றார் அது எப்படி..

கண்ணன் நகைப்பை விடாமல், எல்லாம்... வேறு என்ன? நீ என் மீது வைத்த அழமான காதலைப் பார்த்துதான்.. வேதநாயகமம் உன் தந்தையும் மனம்மாறிவிட்டனர். வேதநாயம் உன் தந்தைக்கு உதவுவதாய் சொல்லிவிட்டார். இனியும் தடுக்கக் கூடாது உங்களை சேர்த்து வைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

கண்ணன் விளக்க விளக்க அவளுக்கு மெல் மெல்ல எல்லாம் புரிய ஆரம்பித்தது. ஆனாலும் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

எல்லாம் சரி... நான் உங்களை விரும்பியது ஊர் அறிந்த விஷயம்.... ஆனால் நீங்கள்... நீங்கள்.... எப்படி எப்போது என் மீது காதல் வைத்தீர்கள்... உங்கள் மனது எப்படி தொபுக்கடீர் என அந்தக் காதல் கடலில் விழுந்தது?

அவள் கேலியும் கிண்டலுமாய்க் கேட்டுத்தான் குறும்பாய்ப் பார்த்தாள்.

கேட்ட கண்ணன் இதழ்களிலும் குறுநகை படர்ந்தது.

புருவங்களை உயர்த்தியபடி அவளை நேராய் பார்த்தவன், மௌனம்! என்றான் ஒற்றைச் சொல்லமாய்.

என்ன மௌனமா?

ஆமாம் கண்மணி....

அட... என்ன... என்ன சொன்னீர்கள்...? கண்... கண்மணியா... அதற்குள் தொபுக்கடீர் என விழுந்த காதல் கடலில் நீந்தி காதல் மன்னாகி... காதலியை கொஞ்சம் கூட ஆரம்பித்தாயிற்றா...? சரிதான்!

அவள் மறுபடியும் கலகலவென கேலி பொங்க, ரஸித்துச் சிரிக்க... அவனும் அதை ரஸித்தான். பின, கண்மணி, நான் சொல்ல வந்த மௌனம்... என் காதல்... வழி... என் காதலை, நான் உன்மீது கொண்டிருந்த மிகப்பெரிய அன்பை, மௌனமாகவே உனக்கு புரிய வைக்க, உன் மனதுக்கு தெரிவிக்க, நான் தேர்ந்தெடுத்து இனிமை வழி அது...!

அதாவது.. மௌனமாக காதலித்தீர்கள். அதைத் தானே இப்போது சொல்ல வருகிறீர்கள் ஐயா?

அவள் கேலிக்கு அவனும் விடாமல், அதேதான்! இப்போதாவது புரிந்து கொண்டீர்களே அம்மா? என்றான் பெருஞ்சிரிப்பாய்.



அவளது வசீகரமான சிரிப்பை ஆசையாய் ரஸித்துப் பார்த்தவன் முகத்தில் கொண்டிருந்த திகைப்பு இறுக்கம் எல்லாம் தளர்ந்து குதூகலம் கொள்ள ஆரம்பித்தது போல் இன்பமாய் மலர்ந்தான் அவன்!

அதில் மகிழ்வாகி மெல்ல அவள் இடையை வளைத்தவன் அப்படியே மென்மையாய் அணைக்கவும் செய்தான். முதன் முறையாய் ஏற்பட்ட அந்த இனிமையான ஸ்பரிசத்தில் குங்குமமாய் முகம் சிவக்க அப்படியே அவன் நெஞ்சில் புதைந்தாள் மதுமதி.

அவளது செயலில் கிறக்கமானவன் போல் தன் விழிகளால் அவளை ஆசையாய் பார்த்த கண்ணனும் மேலும் அவளை இறுக்கிக் கொண்டான். இனிமைக் கனவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தனர் இருவரும்.

(முற்றும்)




**தேவையான பொருட்கள்:** பால் – 1 லிட்டர், பச்சரிசி – 1 குழிக் கரண்டி, சர்க்கரை – அரை கப்.

**செய்முறை:** பச்சரிசியை ஊற வைத்து மையாக அரைக்கவும். குழித் தட்டு ஒன்றில் கால் அங்குல கனத்துக்கு மாவை ஊற்றி, ஆவியில் 10 நிமிடங்கள் வேக வைக்கவும். இதை சிறு துண்டுகளாக்கவும்.

அடி கனமான வாணலியில், துண்டுகளாக்கிய அடையை ஒரு கப் தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். பாலை சிறிது சிறிதாக சேர்த்து கொதிக்க விடவும். வெந்ததும், சர்க்கரை சேர்த்து 2 நிமிடங்கள் கொதித்ததும் அடுப்பை அணைக்கவும்.

**குறிப்பு:** இது கேரளா ஸ்பெஷல் பாயசம். பாலுக்குப் பதில் தேங்காய்ப் பால் சேர்த்தும் செய்யலாம். அடைகளை தயார் செய்து, வெயிலில் காய வைத்து எடுத்து, தேவையானபோது உபயோகிக்கலாம்.

**குறிப்பு:** கேரளாவில் மிகப் பிரபலமான அயிட்டம் இது!